விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 25 திங்கட்கிழமை (07.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 140

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்

## ஆயர்கள் மாநாட்டில் கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கையின் படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள், எதிர்காலத்துக்கான நல்ல சாத்தியத்தையும் நம்பிக்கையையும் கொண்டிருப்பதாக பாராட்டியுள்ள இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு, மற்றுமொரு பெறுமதிமிக்க வாய்ப்பு தவறிப்போவதை தவிர்ப்பதற்காக அரசாங்கம் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரியுள்ளது.**

தற்போதைய தருணத்தில் அமைதியும் நல்லிணக்கமும் மிகவும் முக்கிய அவசர தேவையாக இருக்கின்ற நிலையில் அந்த் ஆணைக்குழுவின் சாத்தியமிக்க பரிந்துரைகளை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்று ஆயர்களின் மாநாடு, கார்டினல் மல்கம் ரஞ்சித் தலைமையில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறியுள்ளது.

வடக்கு கிழக்கு கத்தோலிக்க ஆயர்களை உள்ளடக்கிய ஆயர்கள் மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை நோக்கி நாட்டை இட்டுச்செல்லும் நோக்கில் குறைந்த பட்சம் குறியீட்டு அளவிலான நடவடிக்கைகளையாவது அரசாங்கம் எடுக்க வேண்டும். இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை மக்கள் புரிந்து கொள்ளும் நோக்கில் அவை இரு அதிகார பூர்வ மொழிகளிலும் எல்லோருக்கும் விநியோகிக்கப்பட வேண்டும். (20ஆம் பக்கம் பார்க்க)

## 6 இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது


(கோதாவரி)

இந்திய ஆந்திர பிரதேச கோதாவரி மாவட்டம் நிலாம்பட்டினம் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 6 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இத்தகவலை நேற்று 6 ஆம் திகதி ஆந்திர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச கடற்பரப்பில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த இந்திய கடலோர காவல்படையினர் 6 இலங்கை மீனவர்கள் அடங்கிய படகை மறித்து விசாரணை நடத்தியுள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கக்கொடி விவகாரத்தால் தமிழர்கள் பிளவுபடக் கூடாது

### மனோ கணேசன் அட்வைஸ்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடந்த எதிர்க் கட்சிகளின் பொது மேதின நிகழ்வில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தேசியக்கொடியை எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து தூக்கிய நிகழ்வு உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழர்களையும் தமிழ்க் கட்சிகளையும் பிளவுபடுத்தும் காரணியாக அமைந்துவிடக் கூடாது.

இந்தச் சம்பவம் நடந்துமுடிந்துவிட்டது. இனி அதன்மூலம் விளையக்கூடிய நன்மைகளை மாத்திரம் நாம் பார்க்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் (20ஆம் பக்கம் பார்க்க)



கண்டி மற்றும் மஹியங்கனை ஆகிய நகரங்களை இணைக்கும் 18 வளைவுகள் கொண்ட வீதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. 41 கிலோமீற்றர் தூரமான இவ் வீதி 500 கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டது.

## தமிழ் அரசியல் கைதிகளுக்கு நியாயம் கிடைக்க வேண்டும்

### ஐரோ.ஒன்றியம் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நீண்ட கால கைதிகள் தொடர்பில் நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

நீண்ட காலமாக இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் மீது வழக்குத் தொடரப்பட வேண்டும் அல்லது அவர்கள் விடுவிக்கப்பட (20ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் அரசாங்கத்துடன் பேச தமிழ்க் கூட்டமைப்பு விருப்பம்!

### தெரிவுக்குழு குறித்து பின்னர் முடிபாம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பாராளுமன்ற தெரிவுக் குழுவில் இடம்பெறுவதற்கு முன்னர் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்கி சில இணக்கப்பாட்டிற்கு வர விரும்புவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அரசியல் தீர்வு விடயம் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் இடம்பெற்று வந்த பேச்சுவார்த்தை கடந்த ஜனவரி மாதம் முறிவடைந்தது.

அதற்கு பிரதான காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரம் என்ற கோரிக்கையை அரசு தரப்பு நிராகரித்தமையாகும்.

எனினும் பொலிஸ் அதிகார விடயம் குறித்து நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் பேசப்படும் என மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தெரிவித்துவிட்டது.

இந்த நிலையில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் சேர்வதற்கு முன்னர் அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சு (20ஆம் பக்கம் பார்க்க)

## அக்கினி நாள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அக்கினி நாள் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 28ஆம் திகதி நிறைவு பெறுகின்றது.

இக்காலப்பகுதியில் கடும் வெப்பம் நிலவும் என தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது பல தொற்று நோய்கள் ஏற்படுவதற்கான சூழல் காணப்படுவதால் மக்களை அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 29 ஆயிரம் படையினரை கைது செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

கடமைக்கு சமுகமளிக்கவோ அல்லது மன்னிப்பு காலத்தில் முகாம்களில் ஆஜராகவோ தவறிய 29 ஆயிரத்து 92 இராணுவ உத்தியோகஸ்தர்களை கைது செய்வதற் கான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளதாக இராணுவப்பேச்சாளர்ருவன்வணிகசூரியதெரிவித்தார்.

இராணுவத்தைவிட்டுத் தப்பியோடிய 36 ஆயிரத்து 308 பேர் இவ்வருடம் மார்ச் 31 ஆம் திகதி வரையான மூன்றுவருட காலத்தில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு அவர்கள் விரும்பினால் சரணடையலாம். ஆனால் பெரும்பாலான நேரங்களில் நாம் பொலிஸ் அறிக்கைகளைப் பெற்று அவர்கள் ஏதேனும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்களா என ஆராய்கிறோம். குற்றச்சாட்டுக்கள் நிரூபணமானால் அவர்களுக்கு எதிராக பொலிஸாரின் உதவியுடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்கிறோம் என அவர் தெரிவித்தார். (எ-8)

# 15 ஆயிரம் ஆசிரியர்களுக்கு இன்னும் பதவியுயர்வு இல்லை

(கொழும்பு)

ஆசிரியர்களின் பதவி உயர்வை அதிகாரிகள் தாமதித்து வருவதாக கல்வி தொழிலாளர்களின் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. ஒன்றரை வருடங்களுக்கு மேலாக ஆசிரியர்கள் பதவி உயர்த்தப்படவில்லை என அந்த சங்கத்தின் செயலாளர் வசந்த தர்மசிறி தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் கல்வியில் அபிவிருத்தியை எதிர்பார்ப்பதாகவும் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் தற்புகழ்பாடும் அரசு, ஆசிரியர்கள் தொடர்பில் முறையாக செயற்படுவதில்லை.

2010ஆம் ஆண்டே இறுதியாக ஆசிரியர் பதவி உயர்வு வழங்கப்பட்டது. இன்னும் 15 ஆயிரம் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டியுள்ளது. இது தொடர்பில் கல்வி அமைச்சு மற்றும் அரச சேவை ஆணைக்குழு என்பன உடன் கவனம் செலுத்த வேண்டும் என வசந்த தர்மசிறி கோரிக்கை விடுத்துள்ளார். (எ-8)

# அம்புலன்ஸ் விபத்து வைத்தியர் காயம்


(பாரதிநகர்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த அம்புலன்ஸ் வண்டி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் வைத்தியர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இச் சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் மல்லாவி வட காட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. மல்லாவி அரசினர் வைத்தியசாலைக்கு சொந்தமான அம்புலன்ஸ் வண்டியே விபத்துக்குள்ளானது.

வவுனியா வைத்தியசாலைக்கு நோயாளர்களை இடம்மாற்றி விட்டு திரும்பும்போது இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த சிங்கள வைத்தியர் மல்லாவி அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள் ளார். (எ-8-250)

# ஹிலாரி ஆசியாவுக்கு விஜயம் அவதானம் செலுத்துகிறது இலங்கை



(கொழும்பு)

அமெரிக்க இராஜங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டனின் இந்திய விஜயம் தொடர்பில் உன்னிப்பாக அவதானிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கான தனது பயணத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ள ஹிலாரி கிளின்டன் புதுடில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா மற்றும் வெளிவிவகார செயலாளர் ரஞ்சன் மத்தாய் மற்றும் அரசியல் தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இந்திய தலைவர்களுடனான பேச்சுவார்த்தையின்போது பிராந்திய விவகாரங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதால் இலங்கை விவகாரம் தொடர்பிலும் கவனம் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே ஹிலாரி கிளின்டனின் இந்திய விஜயம் தொடர்பில் உன்னிப்பாக அவதானிக்க தீர்மானித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கடந்த கூட்டத் தொடரில் கொண்டுவரப்பட்ட இலங்கை மீதான தீர்மானம் தொடர்பில் இந்தியாவுடன் அமெரிக்கா ஆலோசித்திருந்ததுடன் இத்தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவும் வழங்கியிருந்தது. அத்துடன் இலங்கை விவகாரம் தொடர்பில் இவ்விரு நாடுகளுக்கும் இடையில் அண்மைக் காலமாக நெருங்கிய பிணைப்பு ஏற்பட்டுள்ளது.

அதேவேளை உண்மையைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கும் ஒருமித்த கருத்தை கொண்டுள்ளனர்.

இந்நிலையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவினர் எதிர்வரும் 18 ஆம் திகதி வாசிங்டனில் ஹிலாரி கிளின்டனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இந்நிலையில் ஜெனிவா தீர்மானத்திற்கு பின்னரான இலங்கை நிலைமைகள் குறித்து இந்தியாவுடன் அமெரிக்கா ஆராயுமென எதிர்பார்க்கப்படுகிறது. (எ-8)





**தவறிவிட்டது**

சிவநேசராஜா கஜந்தன் என்பவருடைய 871243425V எனும் இலக்கத்தையுடைய அடையாள அட்டை நவாலி அரசடி சந்திக்கும் ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோயிலடிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 0778697185

முருகமூர்த்தி கோவில் வீதி. நவாலி கிழக்கு, மானிப்பாய். (-6556)


# இரு குழுக்கள் மோதல் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 7 மணியளவில் நல்லூர் பாரதி சிலைக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது. அரசடி 4ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த முத்து (வயது 26) என்ற இளைஞரே இச்சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார்.

ஓட்டோ ஒன்றில் வந்த இளைஞர் குழு ஒன்றிற்கும் அங்கு நின்றிருந்த மற்றைய குழுவினருக்குமிடையே இம்மோதல் ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் விசாரணைகளையும் மேற்கொண்டனர். (எ-8-4)

# உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க காஸின் விலை அதிகரிப்பாம்!

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக விலை அதிகரிப்பு எனக் கூறி அரசு சமையல் காஸ் விலையை அதிகரித்துள்ளது.

இலங்கையில் காஸ் கிடைக்கின்றதா? என ஜே.வி.பி. பிரசார செயலாளர் விஜித ஹேரத் எம்.பி கேள்வியெழுப்பியுள்ளார்.

நாடு பொருளாதார ரீதியில் அதலபாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

ஊழல் மோசடி, வெளிநாடுகளில் பெற்ற கடனுக்கான வட்டி ஆகியவற்றைச் செலுத்துவதற்காக அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களின் விலையை அபரிமிதமாக அதிகரித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு இந்த அரசு ஆடுகின்றது.

எமக்கு ஏற்றவாறு பொருளாதாரக் கொள்கையை மாற்றியமைக்காமல் நாடு மீட்சிபெற முடியாது.

சீமெந்தின் விலை அதிகரிப்பால் வடக்கில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதில் சிக்கல் ஏற்படலாம்.மேலும் யுத்தத்தால் வீடுகளை இழந்தவர்கள் தமது வீடுகளை திருத்திக்கொள்ள முடியாதுள்ளனர்.

இந்த நிலையில் சீமெந்தின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் பால்மாவின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.(எ-8)


கற்க, கற்பவை கற்க, கற்பவை, கசடறக் கற்க.

**YAALH ENGLISH ACADEMY**

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்

- உத்தியோகத்தர்க்கு
- உயர் கல்வி மாணவர்க்கு
- A/L படித்தவர்க்கு
- பிறநாடு செல்பவர்க்கு
- தாய்மார்க்கு
- பாடசாலை மாணவர்க்கு

விபரங்கள் + பெயர் பதிவு : 077 3212 711 மூலம்

வகுப்பிட அனுசரணை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி : யாழ்நகர் (8284)


# விபத்தில் சிக்கி இரு இளைஞர்கள் பலி

பவுஸர் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதால் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இளைஞர்கள் இருவர் பலியாகியுள்ளனர்.அகுங்கல பிரதேசத்தில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உரம் ஏற்றிச் சென்ற லொறியொன்று, பவுஸரை முந்திச் செல்லப் முற்பட்டபோது அவ்விரு வாகனங்களுக்குமிடையில் மோட்டார் சைக்கிள் சிக்கியது. மோட்டார் சைக்கிளின் பின்னால் லொறி மோதியது. அதன் பின் பவுஸரின் பின்புறத்தில் மோட்டார் சைக்கிள் மோதியதாக பொலிஸார் தெரிவித் தனர்.

காயமடைந்த இரு இளைஞர்களும் பலபிட்டிய வைத்தியசாலைக்க கொண்டு செல்லப்பட்டனர். எனினும் அவர்கள் இறந்து விட்டதாக பொலிஸ்பேச்சாளர் அஜித் ரோஹண கூறினார்.

# தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு தொழில் ஈடுபடும் தெற்கு மீனவர்கள்

## கட்டைக்காடு மீனவர் சங்கம் குற்றச்சாட்டு

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பரப்பில் இராணுவத்தின் உதவியுடன் 25ற்கும் மேற்பட்ட தென்னிலங்கை மீனவர்கள் தடை செய்யப்பட்ட சிலிண்டர்கள் மற்றும் டைனமோக்களைப் பயன்படுத்தி கடல் அட்டைகளைப் பிடித்து வருவதாக கட்டைக்காடு மீனவ சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை இராணுவத்தின் உதவியுடன் தென்னிலங்கை மீனவர்கள் மீறியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பரப்பில் ஒருவார காலமாக தங்கி நின்று தென்னிலங்கை மீனவர்கள் தொழில் செய்து வருகின்றனர். இது தொடர்பாக அப் பிரதேச இராணுவத்தினருடன் மீனவ சங்க பிரதிநிதிகள் முறைப்பாடு செய்தனர் எனினும் உயர் அதிகாரிகளின் உத்தரவை மீறி தாம் எதனையும் செய்யமுடியாது எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

தென்னிலங்கை மீனவர்களின் இச் செயற்பாட்டினால் தமது கடல் வளம் அழிக்கப்படுவதுடன் தமது வாழ்வாதராரம் மிகவும் பாதிப்படைந்துள்ளதாகவும் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (எ-8-24)

# விசாரணைகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிவான் நீதிமன்றம் மற்றும் யாழ். மாவட்ட நீதிமன்றம் ஆகியவற்றில் இன்று நடைபெறவிருந்த வழக்கு விசாரணைகள் அனைத்தும் எதிர்வரும் 17-ம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். இன்று பொது விடுமுறை தினம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே வழக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.(எ-4)


**விழிசிட்டி ஞானவைரவ சுவாமி ஆலய வருடாந்த உற்சவம் - 2012**

மேற்படி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் 08.05.2012 (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமாகி 19.05.2012 (சனிக்கிழமை) வரை தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் நடைபெறும் என்பதை அடியார்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தினமும் பி.ப. 3.00 மணிக்கு திருவிழா ஆரம்பமாகும்.

- ஆலய பரிபாலன சபையினர்

விழிசிட்டி, தெல்லிப்பழை. (8414)

# இன்று ஒரு தகவல்

## கனவும் விழிப்பும்

ஒருவனால் தனது குடும்பத்தைக் காப்பாற்ற முடியவில்லை. அதனால் என்ன செய்தான்... ஒருநாள் இரவு மெதுவாக எழுந்து வீட்டுக்கதவைத் திறந்து வெளியில் சென்றான்.

அவனது மனைவி, ஒரு மகன் இவர்கள் இரண்டு பேரையும் விட்டு விட்டு போய்விட்டான். பிள்ளைக்கோ தந்தை மீது கொள்ளைப் பிரியம்.

அதனாலே தந்தையின் பிரிவை அவனாலே தாங்க முடியவில்லை. தினமும் ஏங்கி... ஏங்கி... அழுது... ஒருநாள் அவன் இறந்து போனான்.

வீட்டை விட்டு வெளியேறிய தகப்பன் ஏதோ வேலை செய்து சிறிதளவு பணம் சம்பாதித்தான். பணம் கைக்குக் கிட்டியதும் அவனுக்கு வீட்டு ஞாபகம் வந்தது.

உடனே சம்பாதித்த பணத்துடன் தனது கிராமத்தை நோக்கி பயணத்தை ஆரம்பித்தான். வழியிலே மழை பெய்ய ஆரம்பித்தது. மிகவும் பலத்த மழை. அதனால் அங்கேயிருந்த சத்திரத்திலே தங்கினான்.

அவன் அங்கே தூங்கிய போது தூக்கத்திலே ஒரு கனவு.

அந்தக் கனவிலே... அவன் ஒரு பெரிய ராஜா... தங்க சிம்மாசனத்திலே அமர்ந்திருக்கிறார். அவரைச் சுற்றி... ஏராளமான சேவகர்கள்...

என்ன வேண்டுமென்றாலும் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

அந்த ராஜாவுக்கு ஆறு குமாரர்கள். எல்லோருமே இளவரசர் கோலத்திலே ஆடம்பரமாக காட்சியளிக்கிறார்கள். மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

அருமையான கனவு... எந்தக் கவலையும் இல்லாமல் இவன் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தான்.

இந்த சமயம் பார்த்து ஒரு பெரிய இடி முழக்கம். இவன் விழித்தான். கனவு கலைந்தது. கண்ணைத் திறந்து பார்க்கிறான்... ஒன்றையும் காணவில்லை.

"ஐயோ... என்ன இது... இதுவரைக்கும் நான் படுத்திருந்த ஹம்ஸதூளிகா மஞ்சம் எங்கே போனது? நான் பெரிய மகாராஜாவாக இருந்தேனே. அந்தப் பதவி எங்கே போனது? எனக்கு சேவையாற்றிக் கொண்டிருந்த பணியாளர்கள் எங்கே சென்றார்கள்?" என்று அவனுக்கு பெரிய யோசனை.

அக்கம் பக்கத்தில் இருந்தவர்களை விசாரித்தான்.

எல்லாமே கனவு என்று புரிந்தது. ஏமாந்து போனான். இருந்தாலும் மனதைத் தேற்றிக் கொண்டு விடிந்ததும் தனது வீட்டுப் போய் சேர்ந்தான். இவனைக் கண்டதும் மனைவிக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. அதேநேரம் மகனை நினைத்து அழுகை.

"எங்கே நமது பிள்ளை?" என்று கேட்டான்.

"உங்களின் பிரிவைத் தாங்க முடியாமல் இறந்து விட்டான்" என்றான்.

அதைக் கேட்டதும் இவனுக்கு அழுகை வரவில்லை. அப்படியே சிலை மாதிரி நின்றான்.

இதைக் கண்ட மனைவிக்கு வியப்பு.

"என்ன இது? நமது பிள்ளை மீது எவ்வளவோ அன்பு வைத்திருக்கிறீர்கள். பாசம் உள்ளது. இப்படி சிலை வடிவில் நிற்கிறீர்களே... அது எப்படி உங்களாலே முடிகிறது?" என்று மனைவி வினவினாள்.

அதற்கு அவன் நேற்று இரவு கண்ட அந்த அருமையான கனவுக் கதையைச் சொன்னான்.

அதிலேயும் கனவிலே வந்து சென்ற அந்த ஆறு குமாரர்களுக்காக அழுவதா? இல்லை இங்கே இறந்து போன இந்த ஒரு மகனுக்காகக் கண்ணீர் மல்குவதா?" என்று கேட்டான்.

இந்த உண்மையை ஒரு பெரியவர் அழகாக எடுத்துரைத்துள்ளார்.

இதை முழுமையாகப் புரிந்து கொண்டால், வாழ்க்கை நமக்கு ஒரு ஆனந்தம் தான். ஆனால், அநேமானவர்கள் வாழ்க்கையை ஒழுங்காகப் புரிந்து கொள்வதில்லை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் 270 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன

(பூந்தோட்டம்)

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வவுனியா மாவட்டத்தில் 270 வீடுகள் பரவலாக்கப்பட்ட வீட்டுத்திட்டமாக அமைக்கப்பட்டு வருவதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர் வி.கணேசநாதன் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பரவலாக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின் மூலம் வீடமைப்புக்கு தலா 2 இலட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டு வருவதாகவும் விருகம்ப என்ற திட்டத்தின் மூலம் மடுக்கந்தையில் 100 வீடுகள், வவுனியா வடக்கில் 100 வீடுகளும் ஏனைய வவுனியா பிரதேசங்களில் 100 வீடுகளுமாக 300 வீடுகள் வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வருவதாகவும் வேறோர் திட்டத்தில் 100 வீடுகளும் உபகார என்ற திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 334 வீடுகளும் சுசினின் என்ற திட்டத்தில் 16 வீடுகளும் ஓமந்தை பகுதியில் 200 வீடுகளும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அமைக்கப்பட்டுவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் வீடமைப்புக்கு ஒதுக்கப்பட்ட 334 மில்லியன் ரூபாவில் 145 மில்லியன் ரூபா வவுனியா அரசாங்க அதிபரின் முயற்சியின் காரணமாக வவுனியா மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-266)

# தர்மபுரம் பிரதேச வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி பற்றாக்குறை

## நோயாளர்கள் சிரமம்

(புளியம்பொக்கணை)

தர்மபுரம் வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி பற்றாக்குறையால் நோயாளர்கள் அவதியுறுகின்றனர்.

மேற்குறித்த வைத்தியசாலையில் கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட 10 இற்கும் மேற்பட்ட கிராம மக்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள விசுவமடு, றெட்பானா, நெற்பெலியாறு ஆகிய கிராம மக்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ் வைத்தியசாலையில் ஒரு வைத்தியர் மட்டுமே பணிபுரிவதால் இவ் வைத்தியர் விடுமுறையில் செல்லும் காலப் பகுதியில் இவ் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் உடனடியாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு செல்வதற்கு நோயாளர் காவு வண்டி போதுமானதாக இல்லை.

இவ் வைத்தியசாலையில் ஒரு நோயாளர் காவு வண்டியே உள்ளது. இவ் வண்டி கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்கு சென்று திரும்பும் வரை காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால் நோயாளிகள் ஆயிரத்து 500 ரூபா வரையான பணத்தைச் செலுத்தி முச்சக்கரவண்டி மூலமே செல்ல வேண்டிய அவலநிலை காணப்படுகிறது. உடனடியாக சிகிச்சை பெற வேண்டிய நிலையில் உள்ள நோயாளர்கள் ஆபத்தான நிலையையும் எதிர்கொள்ள வேணடிய நிலையும் உருவாகின்றது. எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு இவ் வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி வசதியை ஏற்படுத்தி தருமாறு நோயாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-263)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 180 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 85 | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 35 | 50 |
| தக்காளி | 100 | 160 | 90 | 120-140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 30 | 30 |
| கோவா | 15 | 20 | 20 | 40 |
| கரட் | 40 | 40 | 40 | 60 |
| பூசணி | 25 | 20 | 25 | 40 |
| புடோல் | 45 | 40 | 30 | 60 |
| வாழைக்காய் | 15-20 | 20 | 15 | 40 |
| சின்ன வெங்காயம் | 40-75 | 40-90 | 70 | 60-80 |
| பெரிய வெங்காயம் | 85 | 85 | 80 | 80 |
| பாகற்காய் | -- | 160 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 50 | 80 |
| பயற்றங்காய் | 140 | 80 | 100 | 60 |
| லீக்ஸ் | -- | 90 | 90 | 130 |
| பீற்றூட் | 30 | 60 | 60 | 90 |
| கறிமிளகாய் | -- | 60 | 40 | 80 |
| முருங்கைக்காய் | 180-200 | 180 | 350 | 200-300 |
| போஞ்சி | -- | 120 | -- | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 150 | -- | -- |
| கீரை - 1 பிடி | 15 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 25 | 20-22 |

# இராசி பலன்

*07.05.2012*
*(சித்திரை 25, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு*
*பிரதமை காலை 7.27 மணிவரை*
*துதியை பின்னிரவு 5.05 மணிவரை*
*அனுஷம் பின்னிரவு 3.17 மணிவரை*
*இராகுகாலம் 7.25-8.55 மணிவரை*
*சுபநேரம் 11.55-1.25 மணிவரை*
*அக்கினி நாள் ஆரம்பம்.*

**மேடம்** ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம், வேலைச்சுமை கூடும், உடல் நலனில் கூடிய கவனம் தேவை, செலவுகள் அதிகரிக்கும், பயந்த சுபாவங்கள் ஏற்படலாம்.

**இடபம்** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள்.

**மிதுனம்** வியாபார விருத்தி ஏற்படும் நாள், வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை காட்டுவீர்கள், ஆரோக்கியம் சீராகி உற்சாகமடைவீர்கள், பழைய கடன்களை கொடுத்து மகிழும் வாய்ப்புண்டு.

**கடகம்** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பூர்வ புண்ணிய கருமங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**சிங்கம்** பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும், மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும் நாள், தொழிலில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், வழிபாட்டால் முன்னேற்றமுண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும்.

**துலாம்** புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புகழ் அதிகரிக்கும் நாள், பொருளாதார நிலை உயரும், தொழில் முன்னேற்றமுண்டு, தொலைபேசி வழியில் அனுகூலமான செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்க நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, தொழில் நன்மை கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனையை கேட்பீர்கள், இடமாற்றங்களால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.

**மகரம்** வங்கியில் வைப்பு நிதியை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும், முன்னேற்றம் கருதி பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கும்பம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அன்பு நண்பர்கள் ஆதரவுக்கரம் நீட்ட முன்வருவர், எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம், செய்தொழிலில் முன்னேற்றகரமான நிலை ஏற்படும்.

**மீனம்** மனக்குழப்பம் அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், தொழிலில் கூட்டாளிகள் இணக்கமாக நடந்து கொள்வர், தேக நலன் சீராகும், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கலாம், பயணங்களால் பலனுண்டு.

வளவன்

# மன்னார் எரிவாயு கிணறொன்றின் வர்த்தகப் பெறுமதி வெளியீடு

இலங்கையின் மன்னார் கடற்பரப்பில் கெய்ன் லங்கா நிறுவனத்தால் கண்டெடுக்கப்பட்ட எரிவாயு கிணறுகளில் ஒன்றின் வர்த்தக பெறுமதியை கெய்ன் லங்கா வெளியிட்டுள்ளது. இலங்கைக்கும் கெய்ன் லங்காவுக்கும் இடையிலான பெற்றோலிய வள உடன்படிக்கைக்கு அமைய இது வெளியிடப்பட்டுள்ளது.

கெய்ன இந்திய நிறுவனம் இலங்கை அரசாங்கத்துடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைக்கு அமைய மன்னாரில் மூன்று இடங்களில் எரிவாயு கிணறுகளை தோண்டுவதற்கு அனுமதியை பெற்றுக் கொண்டது.

ஆயிரத்து 753 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் 3 D தரவுகள் மூலம் அதிர்வுகள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு முதற்கட்டமாக மூன்று கிணறுகள் துளையிடப்பட்டன.

கெய்ன் இந்தியாவை தாய் நிறுவனமாக கொண்டுள்ள கெய்ன் லங்கா நிறுவனம் கடந்தாண்டு இலங்கையின் மன்னார் கடற்பரப்பில் முதற்கட்ட எண்ணெய் அகழ்வு பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்தது.

இவற்றின் முடிபுகளின் அடிப்படையில் இரண்டு கிணறுகளிலிருந்து எரிவாயு கண்டெடுக்கப்பட்டுள்ளது. மூன்றாவது கிணற்றிலிருந்து எதுவும் கண்டுபிடிக்கப்படாமையால் அது மூடப்பட்டது.

எவ்வாறாயினும் 30 ஆண்டுகளுக்கு பின்னர் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட வெற்றகரமான அகழ்வாராய்ச்சி பணிகளாக இது அமைந்திருந்தது. உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மிக நேர்த்தியாகவும் பாதுகாப்பான முறையிலும் ஆய்வு நடவடிக்கைகளை நடத்தின.

அத்துடன் 2013 ஆம் ஆண்டில் தமது இரண்டாம் கட்டப் பணிகளை மேற்கொள்ள கெய்ன் லங்கா எதிர்பார்க்கின்றதுடன் இலங்கை அரசாங்கத்தின் வழிகாட்டலின் கீழ் நிபந்தனைகளுக்கு அமைவாக அகழ்வு பணிகளை மேற்கொள்ள கெய்ன் லங்கா கட்டுப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# சிறிலங்கன் எயார்லைன்ஸ் இப்போது யாழ்ப்பாணத்திலும்

SriLankan Airlines

சிறிலங்கன் எயார்லைன்ஸானது யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் புதிய விற்பனை அலுவலகமொன்றை கடந்த 4ஆம் திகதி திறந்து வைத்துள்ளதன் மூலம் தனது சேவை நடவடிக்கைகளை வடக்கிற்கும் விஸ்தரித்துள்ளது.

இக்கிளை அலுவலகமானது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதிகளைச் சேர்ந்த பரந்தளவிலான வாடிக்கையாளர்களுக்கு விமானப் பயணத்துடன் தொடர்புடைய அனைத்துச் சேவைகளையும் வழங்கும்.

ஆசன ஒதுக்கீடு, பயணச்சீட்டு பெற்றுக் கொள்ளல், முற்கட்டணம் செலுத்தப்பட்ட பயணச் சீட்டு தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல், விசேட சேவைகளுக்காக வேண்டுகோள் விடுத்தல், விமானக் கட்டணம் தொடர்பான தகவல்களைப் பெறல், பயணப் பொதிகள், நேர அட்டவணை உள்ளிட்ட எயார்லைன்ஸின் நகர அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளக்கூடிய அனைத்து சேவைகளையும் வழங்கக்கூடிய சகல வசதிகளும் இங்கு உண்டு.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் வடக்கில் தனது நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கென மெட்ரோ ட்ரவல்ஸ் என்ட் டுவர்ஸ் நிறுவனத்தினை பயணிகளுக்கான விற்பனை முகவராக நியமித்துள்ளது.

வட பிராந்தியத்தைப் பொறுத்தவரை தற்போது வெளிநாடுகளுக்கு விமானம் மூலம் சென்று வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனை கருத்திற் கொள்கையில் எமது இப் புதிய சேவை நடவடிக்கையானது எயார்லைன்ஸின் உள்ளூர் சந்தைப்படுத்தல் முயற்சிகளை மேலும் வலுவாக்குமென எதிர்பார்க்கிறோம்.

இப் புதிய முயற்சி எமக்கு பல சந்தர்பங்களை உருவாக்குவதோடு கம்பனியின் வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்யுமென்பதில் நாம் நம்பிக்கையுடன் உள்ளோம் என சிறிலங்கனின் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன தெரிவித்தார்.

பயணிகளுக்கான விற்பனை முகவர் நிலையங்களுக்கூடாக இலங்கையின் அனைத்து பகுதிகளிலுமுள்ள சமூகத்தினருடன் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தும் வகையிலேயே நாங்கள் திட்டங்களை வகுத்து செயற்பட்டு வருகிறோம்.

அந்தவகையில் யாழ்ப்பாணத்திலேயே முதன் முதலாக பயணிகளுக்கான விற்பனை முகவர் நிலையம் மீளத்திறக்கப்பட்டுள்ளதென்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன் என எயார்லைன்ஸின் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரியான ஜி.டி.ஜெயசீலன் குறிப்பிட்டார்.

வட மாகாணம் மீளக்கட்டியெழுப்பப்பட்டு வரும் குறிப்பிடத்தக்க இக்காலகட்டத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணங்களுக்கான தேவை அதிகரித்துள்ள நிலையில், சகல வசதிகளுடனும் கூடிய பயண ஏற்பாடுகள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொடுக்க வேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களுக்கு ஒரே கூரையின் கீழ் அனைத்து சேவைகளையும் நேரடியாக பெற்றுக் கொடுப்பதே எமது ஒரே இலக்கு என சிறிலங்கன் எயார்லைன்ஸின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான முகாமையாளர் ஸமிந்த பெரேரா கூறினார்.

யாழ்.அலுவலகம் திறந்து வைத்த முதல் ஆறு மாத காலப் பகுதிக்குள் பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கென விசேட சீட்டிழுப்பு ஒன்று நடத்தப்படும். தெரிவு செய்யப்படும் அதிர்ஷ்டசாலிக்கு சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை வழங்கப்படும். இந்தியாவின் ஏதாவதொரு இடத்தைச் சென்றடைவதற்கான டிக்கற் இலவசமாக வழங்கப்படும்.

இப்புதிய அலுவலகம், இ. 272, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ளது. தகுதி வாய்ந்த ஊழியர்களைக் கொண்டிருக்கும் இந்த அலுவலகமானது, வார நாட்களில் காலை 8.15 மணி முதல் மாலை 5 மணி வரையிலும் சனிக்கிழமைகளில் காலை 8.15 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரையிலும் திறந்திருக்கும். (போயா மற்றும் வர்த்தக விடுமுறை நாட்களைத் தவிர) மேலதிக தகவல்களுக்கு 021 222 0404 / 021 221 9423/ 424 ஆகிய தொலைபேசி இலங்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியுமென நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5440.52 | 5375.44 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 4857.40 | 4815.45 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 1,984.54

**உயர்வடைந்த பங்குகள்(ரூ)** ஒபிஸ் ஈகுவிப்மன்ட்(609.40), சிளப்ஜ(233.20), ஆஸிரி சென்ரல்(171.70), ஈபி கிரேஸி(1399.00), ரீ சிமோல்ஹோல்டர்(52.50).

**சரிவடைந்த பங்குகள்(ரூ)** சிரஸ் லிசர்(W)(0.40), ஹரிசந்திர(1655.20), தபினான்ஸ் கோ(30.00), பிமுத் லங்கா(26.40), எளம்பி லீசிங்(X)(0.30).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# 10 ரூபா, 2000 ரூபா நாணயத் தாள்கள் இனிமேல் அச்சடிக்கப்பட மாட்டாது


**- அஜித் நிவாட் கப்ரால்**

10 ரூபா மற்றும் 2000 ரூபா நாணயத்தாள்கள் இனிமேல் அச்சடிக்கப்படமாட்டாதென மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இனிமேல் நாம் 10 ரூபா தாள் வெளியிடமாட்டோம். பதிலாக குற்றி நாணயத்தையே வெளியிடுவோம். இருப்பினும் 2000 ரூபா தாளையும் இனி மேல் அச்சடிக்க மாட்டோம். நாம் ஏற்கெனவே 20 ரூபா, 50 ரூபா, 100 ரூபா, 500 ரூபா, 1000 ரூபா, 5000 ரூபா தாள்களை வெளியிட்டுள்ளபடியால் 2000 ரூபா தாளுக்கான தேவையில்லை.

2010இல் 13.6 மில்லியன் அழுக்கடைந்த நாணயத்தாள்களையும் 2011 இல் 137 தாள்களையும் மத்திய வங்கி சுழற்சியிலிருந்து அகற்றியுள்ளது. இவ்வாறு மீளப்பெறும் தாள்களுக்கு பதிலாக காலத்துக்கு காலம் புதிய தாள்கள் வெளியிடப்படுகின்றது.

# கொமர்ஷல் வங்கியின் புதிய பணிப்பாளர்கள்



கொமர்ஷல் வங்கி அதன் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் ரவி டயஸும், பிரதம செயற்பாட்டு அதிகாரியாகவும் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் ஜெகன் துரைரட்ணமும் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

ரவி டயஸ் வங்கித் துறையில் நீண்டகால தொழில்சார் அனுபவம் கொண்டவர். பெப்ரவரி 2008 முதல் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரியாக பணியாற்றியுள்ளார். 2012 பெப்ரவரி 27 முதல் வங்கியின் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இதேபோல் ஜெகன் துரைரட்ணமும் வங்கியியல் துறையில் நீண்டகால அனுபவத்தைக் கொண்டவர்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 125.03 | 129.07 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 202.11 | 209.35 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 163.86 | 170.45 |
| சுவிஸ் பிராங் | 136.09 | 142.25 |
| கனேடிய டொலர் | 125.92 | 131.36 |
| அவுஸ்திரேலிய டொலர் | 127.68 | 133.48 |
| சிங்கப்பூர் டொலர் | 100.21 | 104.37 |
| ஜப்பான் யென் | 1.55 | 1.61 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.39 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.82 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# விழிப்புணர்வை ஏற்படுத்தும் திசைகாட்டி



வெளிநாடு சென்று படிப்பதற்கு திசைகாட்டி உரிய ஆலோசனையை, சரியான பாதையை காட்டுகிறது என திசைகாட்டியின் இயக்குநர் சபை தெரிவித்துள்ளது.

திசைகாட்டி பிறைவேற் லிமிட்டட்டின் ஓர் ஆண்டு பூர்த்தியையொட்டி விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பு கடந்த சனிக்கிழமை யாழ்.ரில்கோ ஹோட்டலில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த திசைகாட்டி பிறைவேற் லிமிட்டட்டின் இயக்குநர் சபையானது,

எமது நடவடிக்கைகள் கண்ணியமாக, பகிரங்கத்தன்மையான முகாமைத்துவத்துடன் நடைபெறுகிறது எனத் தெரிவித்ததுடன்,

அண்மைக் காலத்தில் பல்வேறு மோசடிகள் எம் பிரதேசத்தில் நடந்தேறியதாலேயே தாம் ஒருவகை சமுதாயப் பொறுப்புடன் இந்த விசா ஆலோசனையை வழங்க முற்பட்டதாகவும், தாமும் இலாப நோக்குடனேயே தற்போது செயற்பட்டாலும், நியாயமான சமுதாயப் பொறுப்புடனும் செயற்படுவதாகவும் தெரிவித்தனர்.

எமது நிறுவனத்தில் தற்போது 50 இளைஞர் யுவதிகளிற்கு வேலைவாய்ப்பை வழங்கியுள்ளோம். இன்னும் 3 வருடங்களில் எங்கள் வளத்தை வைத்து சிறு கைத்தொழிற்சாலையை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம் எனவும் தெரிவித்தனர்.

# வவுனியா வளாகத்தை பம்பைமடுவில் அமைக்க நடவடிக்கை எடுங்கள்

## மாணவர் ஒன்றியம் வவு.அரச அதிபருக்கு கடிதம்

(பூந்தோட்டம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை பம்பைமடுவில் நிரந்தரமாக அமைப்பதற்கு ஏற்படும் இடையூறுகளுக்கு தீர்வு காணுமாறு வவுனியா மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் வவுனியா அரச அதிபருக்கு மாணவர் ஒன்றியத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்திற்கு ஒதுக்கப்பட்ட பம்பைமடு காணியில் வளாகத்தை அமைப்பது தொடர்பில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதனால் மாணவர்களும் விரிவுரையாளர்களும் பெரும் சிரமத்திற்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

எனவே,வளாகத்தை நிரந்தர காணியில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வவுனியா வளாகமானது 6 இடங்களில் இயங்கி வரும் நிலை காணப்படுகின்றது. இதன்காரணமாக மாணவர்கள், விரிவுரையாளர்கள் நீண்ட தூரம் பயணம் செய்து கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட வேண்டியுள்ளது. இதற்கு ஒரே தீர்வாகவே பம்பைமடுவில் வவுனியா வளாகத்தை அமைப்பதற்கு இடம் ஒதுக்கப்பட்டது.

எனினும் அங்கு ஒரு சிலரால் மேற்கொள்ளப்படும் இடர்பாடுகளால் மாணவர்களினதும் வளாகத்தினதும் இருப்பிடம் கேள்விக் குறியாகியுள்ளது.

இதன் காரணமாக வவுனியா வளாகத்தின் தரப்பினர் அனைவரும் கவலையடைந்துள்ளனர். எனவே,இவ்வாறானவர்களின் செயற்பாடுகளில் இருந்து வளாகத்திற்கு ஒதுக்கப்பட்ட காணியை காத்து வளாகத்தை ஒரே இடத்தில் இயங்குவதற்கு ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றோம் என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தின் பிரதிகள் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர், வவுனியா மாவட்ட கல்வி சமூக அபிவிருத்தி சங்கம் என்பன உட்பட வளாகத்தின் பிரிவுத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ-266)

# பத்தன்மோட்டை வீதியை புனரமைக்க கோரிக்கை

(பூந்தோட்டம்)

கண்டாவளை பத்தன் மோட்டை வீதியை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதியின் ஊடாகச் சென்று பல விவசாயிகள் நெற் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். ஆயினும் இவ் வீதி சீரின்மையால் பல சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

3 கிலோ மீற்றர் நீளம் கொண்ட இவ் வீதியானது குன்றும் குழியுமாக காணப்படுவதனால் இவ் வீதியூடாக விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான விவசாய உள்ளீடுகள்ள கொண்டு செல்வதற்கும் விளைபொருட்களை எடுத்து வருவதற்கும் கஷ்டங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

அத்துடன் பிரசித்தி பெற்ற பத்தன் மோட்டை முருகன் ஆலயத்திற்கு சென்று வரும் பக்தர்களும் இவ்வீதி ஊடாகவே சென்று வர வேண்டியுள்ளமையால் இவ் வீதியை புனரமைத்துதர உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-266)

# பாலத்தை புனரமைத்து பயணிக்க வழிவிடுங்கள்

## மக்கள் கோரிக்கை

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள யூனியன் குளம் அக்கராயன் ஊடாக நடைபெற்றுவந்த போக்குவரத்து சேவை மாற்றுப்பாதை ஊடாக இடம்பெறுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்போக்குவரத்து பணியானது ஆரம்பத்தில் யூனியன் குள பாலத்தின் மேலாகவே மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் தற்போது இக்குளத்தின் பாலம் உடைந்துள்ளதனால் மாற்றுப்பாதையூடாக போக்குவரத்து நடைபெற்று வருகின்றது.

இதனால் யூனியன்குளம், சுபாஸ் குடியிருப்பு, அக்கராயன்வடக்கு புறமாக உள்ள பொதுமக்கள், அரச சேவையாளர்கள், பாடசாலை மாணவர்கள் பயணத்தை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் உடைந்து போயுள்ள பாலத்தை சீர்செய்வதுடன் தமக்கான இவ்வீதியூடான போக்குவரத்திற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9-254)

# பிரதேச மட்ட சமாச பொதுக்கூட்டம்

(பூந்தோட்டம்)

வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம மற்றும் மாதர் அபிவிருத்தி சங்கங்களின் பிரதேச மட்ட பொதுக்கூட்டம் எதிர் வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபால சுந்தரன் தெரிவித்துள்ளார்.

இப் பொதுக்கூட்டத்திற்கு கலந்து கொள்கின்ற கிராம மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் சமாச அங்கத்துவ கட்டணமாக ஆயிரம் ரூபாவினை செலுத்த வேண்டும் என்பதுடன் கூட்டத்தில் கலந்து கொள்ளும் சங்கத்தின் தலைவர், செயலாளர் பெயரை பிரேரித்து 7 நாட்களுக்குள் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (அ-2-266)

# மேதின புலிக்கொடி விவகாரம் மூன்று நாட்களுக்குள் தீர்வு

## ஜனாதிபதி உறுதிமொழி

யாழ்.மேதினப் பேரணியில் புலிக்கொடி ஏந்திச் சென்ற சம்பவம் தொடர்பாக மூன்று நாட்களுக்குள் தகவல்களை வழங்குவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு வாக்குறுதியளித்துள்ளார்.

திருமண வைபத்தில் கலந்து கொண்ட திஸ்ஸ அத்தநாயக்கவிடம் கடந்த 4 ஆம் திகதி ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

திஸ்ஸ அத்தநாயக்கவை சந்தித்த ஜனாதிபதி யாழ்.மேதினக் கூட்டம் எவ்வாறு நடைபெற்றதென வினவியுள்ளார். இதன்போது அரசாங்கத்தின் தேவைப்பாடுகளுக்கு ஏற்பவே புலிக்கொடி காட்டப்படிருப்பதாக திஸ்ஸ அத்தநாயக்க தமது ஆதங்கத்தை வெளியிட்டார்.

இது குறித்து ஆராய்ந்து பார்க்க இரண்டு, மூன்று நாட்கள் அவகாசம் தேவையெனக் கூறிய ஜனாதிபதி பேரணியில் புலிக்கொடி காண்பிக்கப்பட்ட சம்பவத்துடன் அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிகளுக்கும் தொடர்பிருக்கலாம் எனக் கூறியுள்ளார். (அ)

# சித்தி விநாயகர் வி.க விளையாட்டு விழா

(பூந்தோட்டம்)

வவுனியா புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் 14 ஆவது மாபெரும் விளையாட்டுவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதன்போது 105 மைல் சைக்கிள் ஓட்டம், 4 பேர் கொண்ட 30 நிமிட கரப்பந்தாட்டம், 15 மைல் மாணவர்களுக்கான சைக்கிள் ஓட்டம், 5 மைல் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம், ஆண்களுக்கான 10 மைல் மரதன், பெண்களுக்கான 3 மைல் மரதன் என்பன இடம் பெறும்.

மாணவர்களுக்கான துடுப்பாட்டப் போட்டி, உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் என்பனவும் மெதுவான மோட்டார் சைக்கிள் ஓட்டம் என்பனவும் நடைபெறவுள்ளன.

இதேவேளை, அன்று இரவு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகத்தின் செயலாளர் பா.பார்த்தீபன் தெரிவித்துள்ளார். (அ-2-266)





உங்கள் முன்னேற்றத்தின் ஊண்டுகோல் எம்மிடம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணத்தை குறைந்த கொடுப்பனவு முறையில் துரித கதியில் பெற்றுக்கொள்ளுங்கள்.

தொலைபேசி: (011) 4 218 218

www.nationstrust.com

Nations Trust Bank
Nations Leasing

(சி-6555)

# வேலணை உலர்மீன் பதனிடும் நிலையமூடாக வருமானம் குறைந்தோருக்கு வேலைவாய்ப்பு

## கடற்றொழிலாளர் கூ.ச.ச.தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணையில் அமைக்கப்பட்டுள்ள உலர்மீன் பதனிடும் நிலையம் மூலம் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண்களைத் தலைமைத்துவமாக கொண்ட குடும்பத்தினருக்கு சிறந்த தொழில்வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என வேலணை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சண்முகன் ரங்கநாயகம் தெரிவித்துள்ளார்.

வேலணை துறையூர் பகுதியில் ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் அந்நாட்டின் பார்சிக் நிறுவனத்தின் திட்டமிடலின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் உலர்மீன் பதனிடும் திட்டத்தை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் அந்நாட்டு பார்சிக் நிறுவனத்தின் திட்டமிடலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த உலர்மீன் பதனிடும் திட்டமானது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெண்களைத் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களின் வறுமையைப் போக்கக் கூடிய திட்டமாகும்.

வருமானம் இன்றி வறுமைக்கோட்டின் கீழ் வாழும் இவ்வாறான குடும்பங்களுக்கு இத்தகைய தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன்மூலம் வறுமையைப் போக்க முடியும்.

இந்தத் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபாவிற்கு மேல் மாதாந்த வருமானம் வரக்கூடிய வகையில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு வெளி மாவட்டங்களுக்கு கடலுணவுகளை கொண்டு செல்வதைத் தடுத்து சமாசத்தின் ஊடாக இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இலகுவாக கடலுணவுகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# குடும்பஸ்தர் மீது தாக்குதல்; சந்தேகநபர்கள் மூவர் கைது

(சாவகச்சேரி)

மீசாலை அல்லாரைப் பகுதியில் குடும்பஸ்தர் மீது வீடு புகுந்து மூன்று பேர் கொண்ட இளைஞர் குழு தாக்கியதில் குடும்பஸ்தர் காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, அல்லாரை பகுதியில் அவரது வீட்டில் கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் சென்ற மூவரே குறித்த குடும்பஸ்தர் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் அப்பகுதியை சேர்ந்த முத்தையா திரவியநாயகம் (வயது 47) என்ற குடும்பஸ்தரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்களையும் கொடிகாமப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(அ-3-24)

# கரவெட்டி ஞானம்ஸ் அணி சம்பியனானது

(கரவெட்டி)

உபய கதிர்காமம் யு.கே. அணியை 7 விக்கெட்டுக்களால் தோற்கடித்த கரவெட்டி ஞானம்ஸ் அணி, கரணவாய் சோளங்கன் விளையாட்டு கழகத்தின் வெற்றிக்கிண்ணத்தைப் பெற்று சம்பியனாகியது.

வடமராட்சியைச் சேர்ந்த 32 கழகங்கள் பங்குபற்றிய அணிக்கு 12 ஓவர் 11 பேர் கொண்ட கிரிக்கெட் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு கரணவாய் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இவ் இறுதிப் போட்டியில் உபய கதிர்காம யு.கே.அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யு.கே. அணியை 11.2 பந்துகளில் 46 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்க ளையும் இழந்தது.

இதில் பூபதி 16, கோபிசங்கர், கோகுலன் தலா 7 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஞானம்ஸ் அணியின் பந்துவீச்சின் சார்பில் சுதர்ஷன் 4, குணதீபன், சேந்திரன் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி 7.3 பந்துகளில் 49 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அனுசேந்திரன் 15, நவகீதன் 14 ஓட்டங்களைப் பெற்றனர்.

யு.கே. அணியின் பந்துவீச்சின் சார்பில் மகிந்தன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இறுதியில் ஞானம்ஸ் அணி 7 விக்கெட்டினால் வெற்றிபெற்று க்ரணவாய் சோளங்கன் வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (அ-3-24)




# தொடர்பாடலை இலகுவாக்கும் வழிகாட்டி நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

செவிப்புலனற்றோர்களுக்கும் வைத்தியத்துறையினருக்குமான தொடர்பாடலை இலகுவாக்கும் வழிகாட்டி நூல் வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஏ.ஆர்.ஓ.டி.நிறுவன தலைவர் டாக்டர் என். சிவராஜா தலைமையில் யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர். திருமதி. பவானி பசுபதிராஜா, கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைப் பணிப்பாளர் டாக்டர். ஏ.கேதீஸ்வரன், யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக்கல்லூரி அதிபர் செல்வி. ஆர். வல்லிபுரநாதன், சிறப்பு விருந்தினர்களாக சற்.ஓ.ஏ.திட்ட இணைப்பாளர் வை. சிவயோகராஜன், யாழ்ப்பாணம் நியூ கமால் செரமிக்ஸ் உரிமையாளர் எஸ்.கைலாயபிள்ளை ஆகியோர் கலந்து கொள்வார்கள். இந்நூலின் அறிமுக உரையினை ஏ.ஆர்.ஓ.டி.செயலாளர் கே.கோபாலகிருஷ்ணன் , ஆய்வுரையினை பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் சோ.பத்மநாதன் ஆகியோர் ஆற்றவுள்ளனர் என வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் அறிவித்துள்ளது. (அ-9)

# இளம் குடும்பஸ்தர் மீது தாக்குதல்

## வத்திராயனில் சம்பவம்

(கரவெட்டி)

தென்னாபிரிக்காவில் இருந்து அண்மையில் ஊர்திரும்பிய இளம் குடும்பஸ்தர் மீது இனந்தெரியாத 5 பேர் கொண்ட குழு தாக்கியதில் குடும்பஸ்தர் காயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இரு குடும்பங்களுக்கு ஏற்பட்ட தகராறு காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் குடும்பஸ்தரின் வீடு புகுந்து குடும்பஸ்தரை தாக்கியுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த வீரசிங்கம் பாலமனோகரன் (வயது 33) என்ற குடும்பஸ்தரே காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றார். சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(அ-3-24)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை , மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவ பீட பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சி பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# ஆன்மீக கருத்தரங்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தின் நூல்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆன்மீக கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணிக்கு சர சாலை நூலகமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைமை அலுவலக சுவாமி ஸ்ரீமத் சுவாமி சர்வரூ பானந்தா மனித வாழ்வில் ஆன்மீகம் என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார்.


இந்நிகழ்வில் சகலரையும் கலந்து பயன்பெறுமாறு நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார்.

(அ-3-29)



யாழ். பாதுகாப்பு படைப்பிரிவின் ஏற்பாட்டில் வெசாக்தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் இரவு பொதுநூலக முன்றலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி நாடாவெட்டி நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதனையும் அமைக்கப்பட்டிருந்த வெசாக் கூடுகளையும் அவற்றினை விருந்தினர்கள் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளீன், என்.குமார்)

# அன்பை கொண்டாடுதல்



## வன்முறை

ஏதோ ஒரு காரணத்திற்காக செய்யப்படும் மோசமான செயல் போர்! ஒவ்வொரு போருக்கும் ஒரு காரணம் இருக்கிறது. அந்தக் காரணம்தான் போரை நியாயப் படுத்துகிறது. ஆனால் காரணம் மிகச் சிறியதுதான். சண்டையில் ஈடுபடு பவர்கள் அதை, அந்தக் காரணத்தை பெரிதுபடுத்துகிறார்கள். காரணம் மாறும்பொழுது நியாயப்படுத்துதல் காணாமல்போய் விடுகிறது. ஒவ்வொரு போருக்கான காரணங்கள் யாவும் ஒரு குறிப்பிட்ட சில மனங்களால் மட்டுமே நியாயப் படுத்தப்படுகின்றன. அதுவும் குறிப்



பிட்ட காலத்துக்கு மட்டும்தான்! எப்படியோ, சண்டை என்பது இந்த பூமியில் தவிர்க்க முடியாததாக இருக்கிறது.

மனிதர்கள்தான் போர் தொடுக்கிறார்கள். படைப்பின் வேறு எந்த உயிரினமும் பெரிய அளவில் சண்டையிட்டு, அழிவை ஏற்படுத்துவதில்லை! ஏனெனில், அவைகளுக்கு அதற்கான காரணம் ஏதுமில்லை. மிருகங்கள் தனக்கு வேண்டிய இரையை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றவற்றை அப்படி அப்படியே விட்டுவிடுகின்றன. ஆனால், மனித இனமோ வெகு காலமாக சண்டையில் ஈடுபட்டுக் கொண்டே வருகிறது. ஏனெனில், மனிதன் தனது ஒவ்வொரு செயலுக்குமே ஒரு காரணம் சொல்லிக் கொண்டு, அதை நியாயப்படுத்தவும் செய்கிறான். ஆனால், காரணம் மாற மாற அவனது நியாயப்படுத்தல்கள் விழுந்து விடுகின்றன.

மனிதன், இந்தக் காரணம் தேடுதலை முறியடித்து உயர்வாக சிந்திக்க வேண்டும். அப்பொழுதுதான் அவன் தெய்வீகத்தை உணர்வான். சண்டையில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள மாட்டான். மக்கள் அறிவுப் பூர்வமாக செயற்பட ஆரம்பித்தால்தான், வெறுப்பு என்னும் கட்டத்தைத் தாண்டி, தன் மன உணர்வுகளை மேம்படுத்தினால்தான் சண்டைகள் நிறுத்தப்படக்கூடும்.

அழிவை மட்டுமே தரக்கூடிய, இரு தரப்பினருக்குமே துன்பத்தைத் தரக் கூடிய செயல்தான் தீவிரவாதம் என்பதாகும். இப்படிப்பட்ட செயலில், சண்டையிடுபவர்கள் சாதிக்க நினைக்கும் இலக்கை எட்டுவதற்குள், மனிதநேயம் அழிக்கப்படுகின்றது.

ஏமாற்றம், இலக்கை எட்டுவதில் அவசரம் அல்லது ஆத்திரம், நிதானமில்லாத செயல், குறுகிய கண்ணோட்டம் மேலும்; குழப்பமான உணர்வுகள் ஆகிய இவைகள் எல்லாமே தீவிரவாதத்திற்கான சில காரணங்களாகும். வேறுசில, ஆராயப்படவும், நிரூபிக்கப்படவும் இயலாத காரணங்களாலும் தீவிரவாதம் வேரூன்றுகிறது! அதாவது, சொர்க்கமும், புண்ணியமும் கிட்டும் என்ற கொள்கையுடன் செயற்படுவது, மற்றும் சர்வ வல்லமையையும், இறை சக்தியின் மகிமையையும் புரிந்துகொள்ளாத, எங்கும் நிறைந்திருக்கும் குழந்தைத்தனமான கருத்து அதாவது, இறை சக்தி சிலருக்கு சாதகமாகவும், மற்றவருக்கு பாதகமாகவும் செயற்படுவதாக நம்புவது!

தீவிரவாதம் ஒவ்வொருவர் மனதிலும் மனப்பிராந்தியை உண்டு பண்ணுகிறது. மேலும் பஞ்சம், துன்பம், உயிரிழப்பு இவற்றை அதிகரிக்கச் செய்து எந்தக்கண்கூடான இலாபமும் இல்லாமல் செய்துவிடுகிறது. வாழ்க்கைக்குத் தேவையான, உதவியாக இருக்கக்கூடிய தீர்வுகளுக்குப் பதிலாக

**ஆன்மீகம் 48**

அழிவு என்ற ஒன்றையே பதிலாக தீவிரவாதி பெறுகிறான். ஒருபிரச்சினைக்குத் தீர்வு காணாமல் வெறும் விமர்சனமே சொல்லிக் கொண்டிருப்பீர்களானால், அது தீவிரவாதம் எனும் வித்தயிலிருந்துதான் வருகிறது என்று அறியுங்கள்.

ஒரு தீவிரவாதியிடம் காணப்படும், பயமற்ற தன்மை, பொறுப்பேற்றல், தியாகம் போன்ற தகுதிகளை நீங்கள் பாராட்டலாம். ஆனாலும், எதையெல்லாம் செய்யக் கூடாது என்பவற்றையும் அவர்களிடமிருந்து நீங்கள் கற்கவேண்டும். உயிரைவிட தங்களுடைய கொள்கைகளும், கோட்பாடுகளுமே பெரிதென மதித்தல்,

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

வாழ்க்கையை குறுகிய தோற்றமாக்கிகொள்ளுதல், வாழ்வின் பல வழிவகைகளை மதியாதிருத்தல் ஆகியனதாம் அவ்வகள். (தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள்

**48**


புத்தி இரேகை சந்திரமேட்டில் வளைந்து அதன் எல்லைவரை சென்றால் உன்மத்தநிலை உண்டாகுமென்பது மேல்நாட்டு இரேகை சாஸ்திரிகளின் அபிப்பிராயம். ஆனால், அத்தகைய இரேகையுள்ள கைகளைப் பார்த்தவரை அவ்வாறு எண்ணுவதற்கில்லை. ஒரு முடிவுக்கும் வராமல் நீண்ட யோசனையின் இருப்பரெனச் சொல்லத்தகும்.

1. புத்தி இரேகை சந்திரமேட்டில் தொங்கி இறுதியில் ஒரு நக்ஷத்திரக் குறியிருந்தால், உன்மத்தரெனச் சொல்லத்தகும். முதல் படத்தைப் பார்க்கவும்.

2. புத்தி இரேகை சந்திரமேட்டில் சென்றபின் இறுதியில் சங்கிலிபோல் அமைந்திருந்தால் சித்தப்பிரமை கொண்டவர் என்பதைக் குறிக்கும்.

3. புத்தி இரேகை சந்திரமேட்டில் வளைந்து இறுதி ஒரு கிராஸ் குறியுடன் காணப்படில் மனோ விருத்தியில் தடையுண்டாவதை அறிவிக்கும்.

புத்தி இரேகை சந்திரமேட்டில் சென்று இறுதியில் தீவு அல்லது புள்ளிக் குறியிருந்தால் மனத்தில் நோயுள்ளவர் என்பதாகும். இன்னும் இறுதியில் புத்திஇரேகை சிறுசிறு துண்டு இரேகைகளால் தொடர்ந்திருந்தாலும் மனோ வியாதியைக் குறிக்கும். சந்திரமேட்டில் சென்ற புத்தி இரேகையின் இறுதியில் எவ்விதக்குறி காணப்படினும் அனைத்தும் அபாயத்தையறிவிப்பதேயாகும். சந்திர மேட்டில் புத்தி இரேகை செல்வதால் மானசீகமான கற்பனை விசேடப்




படுவதால் ஞாபகத் தடுமாற்றம் உண்டாகிவிடும். சந்திரமேட்டில் புத்திஇரேகை வளைந்து செல்லும் தன்மையை நன்றாகக் கவனிக்க வேண்டும்.


4. புத்தி இரேகை தளர்ந்து சந்திரமேட்டில் விழுந்துவிடுமாயின் சதா யோசனையும் கற்பனையுமே என்பதைக் குறிக்கும்.

5. இந்தப் படத்தில் காண்பது போல அநேகர் கைகளில் புத்தி இரேகை ஒழுங்காகக் குறுக்கே சென்று பிறகு ஒடிந்து சந்திரமேட்டில் திரும்பியிருப்பதைக் காணலாம். புத்தி இரேகை ஒடியும் காலளவுவரை, சுதந்திரப்போக்கும், முடிவான வார்த்தையும், கூரிய புத்தியும் கொடுக்கும் என்பதை அனுபவமாகப் பார்க்கலாம். அதன் பிறகு சந்திர மேட்டில் திரும்பியதன் பலனாகப் பலவித யோசனை செய்யவும். மற்றவர்கள் அபிப்பிராயத்துக்குட்படவும் நேரிடும்.

இவ்விதம் அமைவது நலமன்று. புத்தி இரேகை திடீரென ஒடியாமல், குற்றங்குறையின்றி அழகாக வளைந்து சந்திர மேட்டில் சென்றிருந்தால் மிகக் கௌரவம் தாங்கி நிற்கும். கெடுதலிராது. சிந்தனை ஓர் அளவுக்குட்பட்டு நீதிபதி போல் ஒரு முடிவுக்கு வருவர்.

6. புத்தி இரேகையின் இறுதி இரண்டு கிளைகளாகி, ஒன்று மேல் நோக்கியும் மற்றது கீழ்நோக்கியும் சிலர் கையில் களில் காணப்படும். இது, இரு வகையாய் யோசிக்கும் தன்மையைக் குறிக்கும். இன்னும் விசாலமான புத்தியையும் நெறி தவறா நிலையையும் விளக்குவதாகும். மேல் நோக்கிய கிளையின் முனை புதன் மேட்டை நாடியிருந்தால் கடவுள் பக்தி, தத்துவ விசாரம் முதலியவை களைக் கொடுப்ப தோடு வழிபடுந் தெய்வம் வாழ்வின் மர்மங்களைக் கனவிலாவது, தியான முடிவிலாவது உணர்த்துவதாகும். (தொடரும்)

## புத்தி இரேகையின் குறைகளும் பலாபலன்களும்



**சக்தி**

# வணிகம் செய்வதற்கு இலங்கை வந்த முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்த முடியாது

## சுமங்கல தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

தம்புள்ள பள்ளிவாசல் உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. அரசாங்கமும் இது தொடர்பில் இன்னும் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

இந்நிலையில் பள்ளிவாசல் விவகாரத்தில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்று தம்புள்ள ரங்கிரி விகாரையின் பிரதம பிக்கு இனாமலுவே சுமங்கல தேரர் எச்சரித்துள்ளார்.

இலங்கையின் ஆங்கில செய்தித்தாள் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இந்தக் கருத்துக்களை அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் பௌத்தம் 2300 வருட வரலாற்றை கொண்டது. இஸ்லாமியர்கள் இலங்கைக்கு வணிகத்துக்காகவே வந்தனர். ஆண்கள் மாத்திரமே இங்கு வந்தனர். பின்னர் இங்குள்ள சிங்கள மற்றும் தமிழ்ப் பெண்களை ஏமாற்றி திருமணம் செய்து கொண்டனர்.

இதுவே அவர்களின் வரலாறு. எனவே, அவர்கள் இங்கு வந்து தமது வரலாற்றை காட்டமுடியாது. தம்புள்ள விகாரை உலகத்தின் முக்கிய இடங்களில் ஒன்றாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனை முஸ்லிம்கள் குழப்பியடிக்க பார்க்கின்றனர்.

அதற்கு இடம்தர முடியாது. உலகம் முழுவதும் இஸ்லாமிய அடிப்படைவாதம் பரவி வருகிறது. ஆனால், பௌத்த அடிப்படைவாதம் எங்கும் இல்லை.

இலங்கையில் 14 மில்லியன் பௌத்தர்கள் உள்ளனர். முஸ்லிம்கள் எத்தனை பேர் உள்ளனர். தாய்லாந்து, மியன்மார் ஆகிய நாடுகளில் பௌத்தர்கள் அதிகமாக உள்ளனர். வத்திக்கானில் கிறிஸ்தவர்கள் அதிகமாக உள்ளமையால் அது கிறிஸ்தவ நாடு என்று கொள்ளப்படுகிறது.

மத்திய கிழக்கில் சில நாடுகள் முஸ்லிம்களை அதிகமாக கொண்டுள்ளமையால் அவை முஸ்லிம் நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

எனவே, இலங்கையில் வந்து பௌத்த கலாசாரத்துக்கு மத்தியில் தம்முடைய வரலாற்றை முஸ்லிம்கள் நிலைநாட்ட நினைப்பது கொள்கையாகவே இருக்கும் என்று இனாமலுவேசுமங்கலதேரர்குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# தகவல் சுதந்திரம் தொடர்பான சட்டமூலம் விவாதத்திற்கு

தகவல் சுதந்திரம் தொடர்பான சட்டமூலம் பாராளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் எதிர்க்கட்சி தலைவரினால் தகவல் சுதந்திரம் பற்றிய சட்டமூலம் தனிப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் உத்தேச சட்டமாக பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

எனினும் இந்த சட்டம் தொடர்பான விவாதங்களை அரசாங்கம் காலம் தாழ்த்தி வந்தது.

இந்தவார பாராளுமன்ற அமர்வுகளில் தகவல் அறிந்து கொள்ளும் உத்தேச சட்டத்தை மீளவும் சமர்ப்பிக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் ஏற்கனவே சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். (அ-2)

# ஈரானிடம் 2 பில்லியன் அமெரிக்க டொலரை கடனாக பெற முயற்சி



ஈரானிடமிருந்து இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக பெற்றுக் கொள்ள அரசாங்கம் முயற்சிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க பொருளாதாரத் தடையை அடுத்து ஈரானிடமிருந்து எரிபொருட்களை இறக்குமதி செய்வதனை அரசாங்கம் கைவிடத் திட்டமிட்டுள்ளது.

எனினும் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை புனரமைக்கும் பணிகளுக்காக ஈரானிடமிருந்துகடன் பெற்றுக் கொள்ள முயற்சிக்கப்பட்டு வருவதாக பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு வங்கிகளிடமிருந்து மேலும் 500 மில்லியன் டொலர் கடன் பெற்றுக் கொள்ளப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் தொடர்ச்சியான கோரிக்கைகளை அடுத்து கடன் வழங்குவது குறித்து ஈரான் கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# ஆணைக்குழுவின் இறுதி பரிந்துரைகளை அமுலாக்க மற்றொரு ஆணைக்குழு

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பரிந்துரைகளை அமுல்படுத்துவது குறித்து ஆராயும் நோக்கில் மற்றுமொரு ஆணைக்குழு நிறுவப்பட உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். அண்மையில் நடைபெற்று முடிந்த அமைச்சரவை கூட்டத்தின் போது வெளிவிவகார அமைச்சர் இத்தகவலை குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தலைமையிலான விசேட ஆணைக்குழுவொன்று நிறுவப்படவுள்ளது. உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் எவற்றையெல்லாம் அமுல்படுத்த முடியும் என்பது குறித்து இந்த புதிய ஆணைக்குழு ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆணைக்குழுவின் பணிகளுக்கு அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியம் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களை நியமிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. வெகுவிரைவில் இந்த ஆணைக்குழு தமது பணிகளை ஆரம்பிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. இதன்படி உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பரிந்துரைகளை அமுல்படுத்தும் முதன்மைப் பொறுப்பு ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் கூட்டணி கட்சிகளின் நிலைப்பாடு குறித்த அறிக்கைகள் கிடைக்கப்பெற்று வருவதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். (அ-2)

# உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து சந்தைப்படுத்துவதற்கு நடவடிக்கை

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(கிளிநொச்சி)

எமது மக்கள் உள்ளூர் உற்பத்திகளில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். எனவே, அவற்றை தரமானதாகவும் சந்தைப்படுத்தலுக்கு ஏற்ற வகையிலும் மேற்கொள்வதற்கான பயிற்சிகளை வழங்க நாம் தயாராக உள்ளோம் என ஈ.பி.டி.பி.பராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அண்மையில் நடைபெற்ற உள்ளூர் உற்பத்தி பொருள் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எமது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கும் அதற்கான உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கும் நாம் தயாராக உள்ளோம். அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் மாதர் அமைப்புக்களால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான கிராமிய கைத்தொழில் உற்பத்திகளை மேம்படுத்தும் பொருட்டு உற்பத்திகளின் தரத்தினை அதிகரிப்பதற்கான பயிற்சிகளையும் அவற்றை சந்தைப்படுத்துவதற்கு ஏற்ப பொதி செய்வதற்கான பயிற்சிகளையும் வழங்குவதற்கு நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

இதற்கு அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ துணை புரிவதாக தெரிவித்துள்ளார். எனவே, உற்பத்தியாளர்கள் அனைவரும் கூட்டுறவு அடிப்படையில் இணைந்து செயற்பட முன்வருமிடத்து செயற்பாடுகளை இலகுபடுத்த முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மேலும் தெரிவித்தார். (அ-2)

# பிரித்தானிய மனிதவுரிமை அறிக்கையின் குற்றச்சாட்டுக்கள் தவறானவை

## த.ம.வி.பு. கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பிரித்தானிய மனிதவுரிமை அறிக்கையின் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பலவந்தமான முறையில் சிறுவர்களை படையில் இணைத்துக்கொள்ளவில்லை என கட்சியின் ஊடகப் பேச்சாளர் அசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

தற்பாதுகாப்பு நோக்கில் மட்டுமே ஆயுதங்களை பயன்படுத்தியதாகவும் யாருடனும் போராடும் நோக்கம் இருக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி ஓர் ஜனநாயக கட்சி எனவும் 2004 ஆம் ஆண்டில் பயங்கரவாதிகளிடமிருந்து பாது காத்து கொள்ளும் நோக்கில் மட்டுமே ஆயுதம் ஏந்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கிழக்கு பொதுமக்களை பயங்கரவாதிகளிடமிருந்து தமது கட்சி பாதுகாத்ததாக குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்களை படையில் இணைத்துக் கொண்டதாக பிரித்தானியா சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க ஆதாரங்களை சமர்ப்பிக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.


யுத்த நிறைவின் பின்னர் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பு ஓர் அரசியல் கட்சியாக உருவெடுத்ததாகவும் ஆயுதங்கள் பாதுகாப்பு தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 123




நச்சுவாயு முகாமின் காவல்நிலையும் வேலியும்




நச்சுவாயு முகாம் சுற்றாடலில் காணப்பட்ட இலட்சக்கணக்கான யூதப்பொதுமக்ளின் சாம்பல் அடங்கிய நினைவுப்பேளை

ஜேர்மனியர்கள், 60 இலட்சத்திற்கும் மேற்பட்ட யூதர்களைக் கொன்றுகுவித்த, நச்சுவாயுக் கட்டடங்கள் (1941-ல் போலந்தில் லப்லினில் ஸ்தாபிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தன-போரின் முடிவுக்கட்டத்தில் சோவியத் படைகளால் கண்டுபிடிக்கப்பட்டன)



நச்சுவாயு முகாம்களில் கொல்லப்பட்ட யூதர்கள் எரியூட்டப்பட்ட சூளைகள்அமைந்த கட்டடம் -கண்டுபிடிக்கப்பட்டபின் அருகில் சோவியத் வீரர்கள்



ஹங்கேரியப் பரப்பில் சோவியத் இராணுவத்தின் வெற்றிகரமான நடவடிக்கைகள் தேசபக்த சக்திகளைக் கணிசமான அளவு சுறுசுறுப்பாக்கின. 1944 டிசம்பர் 2 ஆம் திகதி கம்யூனிஸ்டுக்களின் முன் முயற்சியின் பேரில் சேகேத் நகரில் ஹங்கேரிய சுதந்திர தேசிய முன்னணி தோற்றுவிக்கப்பட்டது. இதில் ஹங்கேரிய முன்னணியில் ஏற்கனவேயிருந்த 4 கட்சிகளைத் தவிர பூர்ஸ்வா- ஜனநாயகக் கட்சியும் தொழிற்சங்கங்களும் இடம் பெற்றிருந்தன. ஹங்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சியால் தீட்டபட்ட இதன் வேலைத் திட்டத்தில், தேசிய மறுமலர்ச்சி, பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடிப்பதில் சோவியத் துருப்புகளுக்கு உதவிபுரிதல், மக்கள் விரோத ஸ்தாபனங்களைக் கலைப்பது, ஜனநாயக சுதந்திரங்களை நிலைநாட்டுவது, நிலப்பிரபுத்துவ நிலவுடமை முறையை ஒழிப்பது, அரசு இயந்திரத்தை பாசிச ஆதரவுச்சக்திகளிடமிருந்து தூய்மைப்படுத்துவது, சோவியத் யூனியனுடன் நட்புறவையும் பாசிச எதிர்ப்புக் கூட்டணியின் மற்ற நாடுகளுடன் உறவுகளையும் ஏற்படுத்துவது ஆகிய அம்சங்கள் அடங்கியிருந்தன.

டிசம்பர் 21 ஆம்திகதி தெப்ரேத்சனில் ஆரம்பமான இடைக்காலத் தேசிய அசெம்பிளியின் தீர்மானங்கள் ஹங்கேரியின் அரசியல் வாழ்வில் பெரும் பங்காற்றின. இந்த அசெம்பிளி அரசுத் தலைவர்களின் பணிகளை நிறைவேற்றிய அரசியல் கவுன்சிலைத் தேர்ந்தெடுத்தது. விரைவிலேயே இது 1-வது ஹங்கேரிய படையின் முன்னாள் தளபதியாகிய மீக்லஷின் தலைமையில் இடைக்காலக் கூட்டு அரசாங்கத்தை அமைத்தது. டிசம்பர் 28 ஆம்திகதி ஹங்கேரியின் இடைக்கால அரசாங்கம் ஜேர்மனிக்கு எதிராக யுத்தத்தை அறிவித்தது.

இடைக்கால தேசிய அசம்பிளியின் முதல் அமர்வு ஹங்கேரிய மக்களுக்கான அறைகூவலை நிறைவேற்றியது. இதில் புதிய, ஜனநாயக ஆட்சியின் முக்கித்துவமும் மக்கள்- ஜனநாயக ஹங்கேரியக் கட்டுமானத்தில் உடனடிக் கடமைகளும் விளக்கப்பட்டிருந்தன. இடைக்காலத் தேசிய அசெம்பிளி மற்றும் அரசாங்கத்தின் தீர்மானங்கள் ஹங்கேரிய மக்களால் உற்சாகத்தோடு வரவேற்கப்பட்டன.


இன்னமும் பாசிஸ்டுகளின் தரப்பிலிருந்த ஹங்கேரியப் போர்வீரர்களை நோக்கி இடைக்கால தேசிய அசெம்பிளி விடுத்த அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது. உங்களைப் பொறுத்தமட்டில் தேசிய இனத்தின் கட்டளையைத் தவிரவேறு கட்டளை இல்லை. தமது ஆயுதங்களை ஜேர்மனிய ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிராகத் திருப்புமாறும் விடுவிக்க வந்த சோவியத் இராணுவத்திற்கு ஆதரவு தருமாறும் விடுதலைக்காகப் போராடும் ஹங்கேரிய போராட்ட வீரர்களுடன் இணையுமாறும் தோற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருந்த புதிய ஹங்கேரிய இராணுவத்தில் சேருமாறும் இடைக்காலத் தேசிய அசெம்பிளி தேசிய இனத்தின் சார்பில் இவர்களுக்கு அறைகூவல் விடுத்தது.

"ஏராளமான சோவியத் போர் வீரர்கள் ஹங்கேரிய பூமியில் இரத்தம் சிந்தினர், நமது மக்களின் விடுதலைக்காக இன்னுயிர் ஈந்தனர். சோவியத் மக்களின் இந்த எண்ணற்ற தியாகங்களுக்காக எங்களுடைய ஆழ்ந்த நன்றி என்றென்றைக்கும் மறக்கமாட்டோம்" என்று ஹங்கேரிய மக்கள் குடியரசின் 25-வது ஆண்டு நிறைவையொட்டி நடந்த விழாக்கூட்டத்தில் ஹங்கேரிய சோஷலிசக் கட்சியின் முதல் செயலாளர் யானஷ்காடர் குறிப்பிட்டார்.

முற்றுகையின் வெளி வளையத்தில் நடைபெற்ற சம்பவங்களின் காரணமாக சுற்றிவளைக்கப்பட்ட புடாபெஸ்ட் படைத்திரட்டை ஒழித்துக் கட்டுவது இழுத்துக் கொண்டே போனது. முற்றுகையை உடைத்து துனாயில் தற்காப்பைப் புனர்நாட்டும் பொருட்டு பாசிச ஜேர்மனியப் படைத் தலைமை 1945 ஜனவரியில் மூன்று பலத்த பதிலடிகளைத் தொடுத்தது. இந்நோக்கத்தோடு அது வெளி வளையத்தில் செயற்பட்ட 4-வது கார்டு படைக்கு எதிராக கணிசமான சக்திகளைக் கொண்டு வந்து குவித்தது. இதற்குப் பின் எதிரி இச்சக்திகளை, குறிப்பாக டாங்கி யூனிட்டுக்களை இடையறாது பெருக்கினான்.

சோவியத் துருப்புகளுக்கு முதலாவது, மூன்றாவது பதிலடிகள் குறிப்பாக கடுமையானவையாக இருந்தன. கொமார்னோ பிரதேசத்திலிருந்து தொடுக்கப்பட்ட முதல் அடியின் பயனாய் பாசிஸ்டுகளால் பெரும் இழப்புக்களை விலையாகக் கொடுத்து துனாய் ஆற்றின் வலது கரையோரமாக 25-37 கி.மீ. தூரம் முன்னேறி எஸ்தெர்கோமிற்கு கிழக்கே, பிச்கே- பன்ஹிடாவிற்கு வடக்கேயிருந்த எல்லையை அடைய முடிந்தது.

ஜேர்மனியர்களால் சாம்பலாக்கப்பட்ட பல இலட்சக்கணக்கான யூதப் பொதுமக்களை நினைவு கூறும் நினைவாலயம்-பின்னாளில் அமைக்கப்பட்டது- நச்சுவாயு முகாம் வாசலில்



(தொடரும்)

# ஸ்ரீலங்கன், மிஹின் லங்கா விமான சேவைகளுக்கு 9 புதிய விமானங்கள்

(கொழும்பு)

அடுத்த 3 வருடத்திற்குள் ஸ்ரீலங்கன் மற்றும் மிஹின் லங்கா விமான சேவைகளை விஸ்தரிக்கும் பொருட்டு மேலும் 9 விமானங்களை கொள்வனவு செய்யவுள்ளது.

இதன்மூலம் விமானங்களின் தொகை 30 ஆக அதிகரிக்கப்படுமென ஸ்ரீலங்கா விமான சேவையின் தலைவரான நிஷாந்த விக்கிரமசிங்க தெரிவித்தார். இரு விமான சேவைகளும் 21 விமானங்களை தற்போது கொண்டுள்ள நிலையில் இது எதிர்வரும் 2015 ஆம் ஆண்டளவில் 30 ஆக அதிகரிப்படும். இவ்வருட இறுதியில் தென்கொரிய தலை நகரான சியோலுக்கு விமான சேவை, கள் ஆரம்பிக்கப்படுமெனவும் இந்தியாவுக்கான சேவைகள் அதிகரிக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

9 வளைகுடா நாடுகளுக்கும் கிழமைக்கு 47 விமான சேவைகள் தற்போது இடம் பெறுகின்றன. கடந்த வருடத்திலிருந்து ஸ்ரீலங்கன் விமான சேவை பக்ரைன், டோகா, மஸ்கட், ஜெட்டாவுக்கான சேவைகளை அதிகரித்துள்ளது. மே முதலாம் திகதியிலிருந்து குவைத்துக்கான நேரடி விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் ஜனவரி– ஏப்ரல் காலங்களில் எமது பயண தளவசதிகள் 90 சத விகிதம் அதிகரித்துள்ளது. எமது விமான சேவைகளில் வளைகுடா பயணிகள் வைத்திருக்கும் நம்பிக்கையை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இவ்வருடம் விமான சேவைகள் மேலும் விஸ்தரிக்கப்பட இருக்கின்றன. ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள இலங்கை தூதுவர் சரத் விஜயசிங்க கூறுகையில், கடந்த வருடம் இரு நாடுகளுக்கிடையில் ஒரு பில்லியன் டொலர் பெறுமதியான வர்த்தகம் இடம்பெற்றதாக தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராச்சிய வெளிநாட்டமைச்சரின் அடுத்த மாத இலங்கை வருகையின் பின் வர்த்தகம் மேலும் விருத்தியடையும். அம்பாந்தோட்டையிலுள்ள துறைமுகத்திற்கு அதிக வர்த்தகத்தை ஏற்படுத்தும் பொருட்டு விரைவில் டுபாய் துறைமுக அதிகாரிகளுடன் பேச்சுகள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஒரு மில்லியன் டொலருக்கு அதிகமாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் முதலீடு செய்யும் பாரிய திட்டங்களுக்கு சர்வதேச நிறுவனங்கள் நிதி உதவி வழங்குவதால் இலங்கை முதலீட்டாளருக்கு முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகிறது.

(அ-2)

# 48 மணித்தியாலத்தில் 6 பேர் உயிரிழப்பு

இலங்கையில் கடந்த 48 மணித்தியாலங்களுக்குள் மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் 6 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்துள்ளனர்.

கம்பஹா, மட்டக்களப்பு, வாழைச்சேனை, பதுரெலிய, புத்தளம், கட்டுகஸ்தோட்ட ஆகிய இடங்களிலேயே இந்த விபத்து சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

குறித்த விபத்துக்கள் மோட்டர் சைக்கிள்கள் பாதையை விட்டு விலகியமை மற்றும் நித்திரை தூக்கத்தில் தூண் மீது மோதியமை, வேறு வாகனங்களால் மோதுண்டமை போன்ற காரணங்களால் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ-2)

# ஜேர்மனி தலைநகரத்தில் கவனயீர்ப்பு நிகழ்வு




ஜேர்மனியின் தலைநகரத்தில் போருக்கும் மற்றும் அரச அடக்குமுறைக்கும் எதிராக பல்லின மக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில் தமிழ் மக்கள் சார்பில் பெர்லின் மக்கள் பிரதிநிதி இணைந்து கொண்டார். இவ் ஆர்ப்பாட்டத்தில் குறிப்பாக இஸ்ரேல் மற்றும் ஈரான் நாட்டின் பிரச்சினை விடயமாக மக்கள் கண்டனம் தெரிவித்தனர். அத்தோடு இஸ்ரேல் நாட்டுக்கு ஜேர்மன் அரசாங்கமும் ஆயுத உபகரணங்கள் விற்பதனையும் மக்கள் கண்டித்தனர். இந்நாடுகளின் பின்னணியில் தமது பிராந்திய நலம் சார் அரசியலை முன்னகர்த்தும் சில வல்லாதிக்க நாடுகளுக்கு எதிராகவும் கோசங்கள் எழுப்பப்பட்டன.

இக்கண்டன பேரணியில் ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினர் அன்ரி குரோத் கலந்து கொண்டார். இறுதியாக தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமும் சர்வதேசத்தின் ஈடுபாடும் எனும் துண்டுப் பிரசுரம் பல்லின மக்களுக்கு வழங்கப்பட்டது.

(அ-2)

# தென்கொரிய களியாட்ட விடுதியில் தீ விபத்து; இலங்கையர் மூவர் பலி

(கொழும்பு)

தென்கொரியாவின் புசான் நகரில் உள்ள கொராகே விடுதியில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் மூன்று இலங்கையர்கள் உயிரிழந்துள்ளதாக தென்கொரிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தீ விபத்தில் மூன்று இலங்கை பணியாளர்கள் உள்ளிட்ட 9 பேர் பலியாகியுள்ளதோடு 25 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரவு வேளையிலேயே இத் தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

கட்டடத்தின் மூன்றாவது மாடியில் ஏற்பட்ட தீ 28 அறைகளுக்கு பரவியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தீயினால் ஏற்பட்ட நச்சு வாயுவை சுவாசித்ததன் மூலம் 7 ஆண்களும் இரு பெண்களும் உயிரிழந்துள்ளனர்.

இதில் பாதிக்கப்பட்டவர்களுள் ஒருவரின் நிலை கவலைக்கிடம் எனவும் ஏனையோருக்கு உயிராபத்து இல்லை எனவும் தென்கொரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். தீ புகையில் இருந்து தப்பிக்க வழியில்லாமையே இழப்புக்கள் அதிகரித்தமைக்கு காரணம் என பொலிஸார் தெரிவித்தனர்.

தீ ஏற்பட்டதன் பின்னர் அவ்விடத்திற்கு சுமார் 20 தீயணைப்பு வண்டிகளில் வந்த 100 தீயணைப்பு வீரர்கள் 10 மணி நேர போராட்டத்தின் பின் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தீ ஏற்பட்டமைக்கான காரணம் தொடர்பில் தென்கொரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-2)

# மஹிந்தவை ஆஸி. அமைச்சர் சந்திப்பதற்கு எதிர்ப்பு

## ஆஸியில் கவனயீர்ப்பு போராட்டம்

(சிட்னி)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய குடிவரவு மற்றும் குடியகல்வு அமைச்சரின் பயணத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் கவனயீர்ப்பு போராட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

அவுஸ்திரேலிய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு முன்னால் இடம்பெற்ற இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை Refugee action Collective (RAC) அமைப்பு ஒழுங்குபடுத்தியிருந்தது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் அவுஸ்திரேலியாவில் தஞ்சமடையும் அகதிகளுக்காக குரல் கொடுக்கம் பல சமூக செயற்பாட்டாளர்கள் பலர் கலந்து கொண்டு குரல் எழுப்பினர்.

போர்க் குற்றவாளியான ராஜபக்ஷவுடன் அவுஸ்திரேலியாவின் அமைச்சர் சந்திப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தால் பாதிக்கப்பட்டு அவுஸ்திரேலியாவில் தஞ்சமடையும் தமிழ் மக்களுக்கு புகலிடம் அளிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

அவுஸ்திரேலியாவின் பல தடுப்பு முகாம்களில் 56 புகலிடம் கோரிய தமிழர்கள் அவுஸ்திரேலிய பாதுகாப்பு புலனாய்வு நிறுவனத்தால் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தாவார்கள் என்று பிரகடனப்படுத்தி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலிய பாதுகாப்பு புலனாய்வு நிறுவனத்தின் இத்தகைய போக்கை கண்டித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் இத்தகைய நடைமுறைகளிலிருந்து தமிழர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

(அ-2)

# வடக்கில் படைவீரர்களின் தற்கொலை அதிகரிப்பு

(கொழும்பு)

வடக்கில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வரும் படைவீரர்கள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக தகவல் தரவல்ல அதிகாரியொருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கில் கடமையற்றி வரும் படைவீரர்கள், உயரதிகாரிகள் மற்றும் சகவீரர்களை சுட்டுக் கொலை செய்யும் சம்பவங்களின் எண்ணிக்கையும் உயர்வடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அண்மைக்காலமாக இவ்வாறான ஆறு, ஏழு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் சாதகமான நிலைமையாக கருதப்பட முடியாது என உயரதிகாரி தெரிவித்துள்ளார். படைவீரர்களுக்கு உளவியல் ரீதியான ஆலோசனை வழங்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# உலகின் மிகப்பெரிய பௌத்த கொடியை பார்வையிட்ட மஹிந்த

கண்டி பொக்காவலை இஸிபத்தன விகாரையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உலகின் மிகப் பெரிய பௌத்த கொடியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் பார்வையிட்டுள்ளார்.

200 அடி நீளமும் 100 அடி உயரமும் கொண்ட உலகில் மிகப் பெரிய பௌத்த கொடியாக இது கருதப்படுகிறது. இப்பௌத்த கொடி இரும்புக் கம்பங்கள் மற்றும் விசேட துணிகளின் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இக் கொடியை பார்வையிட்ட பின் பொதுமக்கள் பார்வைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து இப்பௌத்த கொடியை பார்வையிடுவதற்காக பெருமளவு மக்கள் வந்தவண்ணமுள்ளனர்.

(அ-2)

# இலங்கையை இரகசியமாக கண்காணிக்கும் அமெரிக்கா

## திவயின தகவல்

(கொழும்பு)

அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினர் இலங்கை விவகாரங்கள் தொடர்பில் உளவு பார்த்ததாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் சி.ஐ.ஏ. மற்றும் எப்.பி.ஐ.ஆகிய உளவுப் பிரிவினர் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் இரகசியமாக கண்காணித்துள்ளன. விக்கிலீக்ஸ் இணையத்தளம் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் உளவுப் பணிகளை மேற்கொள்ள அனுமதியளித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக இவ்வாறு உளவு பார்க்கப்பட்டுள்ளது என திவயின செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# கடன் அட்டைகளின் வட்டிவீதம் அதிகரிக்கிறது

இலங்கையில் கடன் அட்டைகளுக்கான வட்டி வீதம் அதிகரிக்கப் படவுள்ளது. இதன்படி எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் இதுவரை 24 வீதமாக இருந்து வந்த கடன் அட்டை வட்டிவீதம் 28 வீதமாக அதிகரிக்கவுள்ளது.

இலங்கையில் பால்மா மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் உயர்ந்தமையை அடுத்தே இந்த முடிவை வங்கிகள் மேற்கொண்டுள்ளன.

கடந்த வருடம் மாத்திரம் 84 ஆயிரம் பேர் கடன் அட்டைகளை பெற்றுள்ளனர். கடந்த மூன்று ஆண்டுகளில் 8 இலட்சத்து 62 ஆயிரத்து 340 ரூபாய்கள் கடன் அட்டைகளை வைத்திருப்போரிடம் இருந்து கிடைத்துள்ளன. எனினும் கடன் அட்டைக்காரர்களிடம் இருந்து 38.5 பில்லியன் ரூபாய்கள் கிடைக்க வேண்டியுள்ளன.

இந்த நிலையில் கடன் அட்டைகளுக்கான விண்ணப்பங்களும் அதிகரித்துள்ளதாக தனியார் வங்கிகள் தெரிவித்துள்ளன. (அ-2)



தலவாக்கலை மேல் கொத்மலை நீர் மின் உற்பத்தி நிலைய அமைப்புப் பணிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜப்பானின் பிரதி பிரதமர் கட்சுயா ஒகாடா ஆகியோர் திரைநீக்கம் செய்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# கிளஸ்டர் குண்டு மீட்கப்பட்ட இடத்தை காட்டுங்கள்; துப்புரவாக்குகின்றோம்

## ஐ.நாவை கோருகிறது இராணுவம்

கிளஸ்டர் குண்டுகளைத் தாம் பயன்படுத்தவில்லை என்று தெரிவித்த இலங்கை இராணுவத்தினர் தற்போது அந்தக் குண்டு கண்டுபிடிக்கப்பட்ட இடத்தை வெளியிட்டால் துப்புரவு செய்ய முடியும் என ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்திடம் கேட்டுள்ளதாக கொழும்பு ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதுக்குடியிருப்பில் கிளஸ்டர் குண்டின் பாகங்களைக் கண்டுபிடித்துள்ளதாகக் கூறியுள்ள போதிலும் ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் அதற்கான நியாயமான ஆதாரங்களை சமர்ப்பிக்கவில்லை என்று இலங்கை அதிகாரிகள் கூறியுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

கிளஸ்டர் குண்டு கண்டுபிடிக்கப்பட்ட குறிப்பிட்ட பிரதேசத்தை வெளிப்படுத்தினால் அங்கு இராணுவத்தினர் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

சான்றுகளை சமர்ப்பிக்கவோ அல்லது கண்ணிவெடி அகற்றுபவருடன் இராணுவத்தினர் பேசுவதற்கோ ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் அனுமதிக்க மறுப்பது மர்மாகவே உள்ளதாகவும் இலங்கை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பகுதியில் சுவிஸ் நாட்டின் எவ்.எஸ்.டி மற்றும் பிரித்தானியாவின் ஹலோரஸ்ட் ஆகிய நிறுவனங்களே கண்ணிவெடிகளை அகற்றி வருகின்றன..

அதேவேளை அரசசார்பற்ற நிறுவனங்களால் கண்டுபிடிக்கப்படும் வெடிபொருட்களை இராணுவத்தின் பொறியியல் பிரிவே வெடிக்க வைத்து அழிக்கவோ செயலிழக்கச் செய்யவோ முடியும் என்றும் கிளஸ்டர் குண்டை அவர்களால் வைத்துக் கொள்ள முடியாது என்றும் இலங்கை இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக கொழும்பு ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# 2012.05 07 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1697- சுவீடனில் ஸ்டொக்ஹோம் நகரின் பழம்பெரும் அரசமாளிகை தீயில் அழிந்தது.

★ 1840- மிசிசிப்பியில் பெரும் சூறாவளி தாக்கியதில் 317 பேர் உயிரிழந்தனர்.

★ 1895-ரஷ்ய அறிவியலாளர் அலெக்சாண்டர் பப்போவ் உலகின் முதலாவது வானொலிக் கருவியை சென்பீட்டர்ஸ்பேர்க்கில் அறிமுகப்படுத்தினார். இந்நாள் ரஷ்யாவில் வானொலி நாளாகக் கொண்டாடப்படுகிறது.

★ 1915-முதலாம் உலகப் போர்: ஜேர்மனியின் யூ-20 நீர்மூழ்கிக் கப்பல் பிரித்தானியாவின் லூசித்தானியா என்ற ஆடம்பரக் கப்பலைத் தாக்கி மூழ்கடித்ததில் ஆயிரத்து198 பேர் உயிரிழந்தனர்.

★ 1920- போலந்துப் படைகள் உக்ரேனின் கீவ் நகரைத் தாக்கிக் கைப்பற்றின. இவர்கள் பின்னர் ஒரு மாதத்தின் பின்னர் செம்படைகளினால் வெளியேற்றப்பட்டனர்.

★ 1920- சோவியத் ரஷ்யா ஜோர்ஜியாவை அங்கீகரித்தது. ஆனாலும் ஆறு மாதத்தின் பின்னர் அது ஜோர்ஜியாவைக் கைப்பற்றியது.

★ 1927-நிக்கராகுவாவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.

★ 1945- இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் இராணுவத் தளபதி அல்பிரட் யோட்ல் ஜேர்மனியின் நிபந்தனையற்ற சரணடைதலுக்கு பிரான்சில் கையெழுத்திட்டார்.

★ 1946- சோனி நிறுவனம் 20 தொழிலாளர்களுடன் டோக்கியோவில் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1948- ஐரோப்பிய அமைப்பு உருவாக்கப்பட்டது.

★ 1952- ஒருங்கிணைந்த மின்சுற்று தத்துவம் ஜெப்ரி டம்மர் என்பவரால் வெளியிடப்பட்டது.

★ 1954- வியட்நாமில் தியன் பியன் பு (Dien Bien Phu) சமரின் போது பிரெஞ்சுப் படைகள் தோற்கடிக்கப்பட்டன.

★ 1992- நாசாவின் என்டெவர் விண்ணோடம் தனது முதலாவது பயணத்தை ஆரம்பித்தது.

★ 1999- கினி- பிசாவுநாட்டில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் நாட்டின் அரசுத் தலைவர் ஜொவாவோ பெர்னார்டோ பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★ 2002- சீனாவின் விமானம் ஒன்று மஞ்சள் கடலில் வீழ்ந்ததில் 112 பேர் உயிரிழந்தனர்.

★ 2007- ரோமப் பேரரசின் ஹெரோட் மன்னனின் கல்லறை ஜெருசலேம் நகருக்கருகில் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 2007-முன்னர் இந்தியாவுடன் இணைந்திருந்த சிறிய கண்டம் ஒன்று தெற்குக் கடல்களின் அடியில் தமது ஆய்வுக் கப்பலான போலார்ஸ்டேர்ன் கண்டுபிடித்துள்ளதாக ஜேர்மனிய அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

★ 2007- நாடு கடந்த நிலையில் வாழ்ந்த வங்களாதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா நாடு திரும்பினார்.

### பிறப்பு

★ 1840- பியோத்தர் த்சாய்க்கோவ்ஸ்கி, ரஷ்ய இசையமைப்பாளர் (இ. 1893)

### இறப்புக்கள்

★ 1539- குரு நானக், சீக்கிய மதத்தை ஆரம்பித்தவர் (பி.1469)

★ 1825-அந்தோனியோ சாலியரி, இத்தாலிய இசையறிஞர் (பி.1750)

★ 1998- அலன் கோர்மாக், நோபல் பரிசு பெற்றவர் (பி.1924)

### சிறப்புநாட்கள்


★ நோர்வே- தேசிய தினம்

★ ரஷ்யா, பல்கேரியா- வானொலி தினம்



★ 1861-வங்காள மொழிக் கவிஞரும் நோபல் பரிசு பெற்றவருமான இரவீந்திரநாத்தாகூரின் பிறந்த தினம். (இ.1941)

# நீதி அமைச்சரால் நீதியை நிலைநாட்ட முடியவில்லை!



தம்புள்ளவில் சுமார் 65 ஆண்டு காலமாக உள்ள மஸ்ஜித்துல் ஹாய்ரா பள்ளிவாசலை அகற்றக் கோரி பௌத்த பிக்குகளின் தலைமையில் சுமார் 2000 பேர் வரையில் கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதி போராட்டத்தில் இறங்கினர். பின்னர் அவர்கள் அந்த பள்ளிவாசலை இடிக்கவும் முயன்றனர். இதனால், பதற்றம் ஏற்பட்டு தொழுகையை நடத்தவிடாமல்- பள்ளிவாசல் சீல் வைத்து மூடப்பட்டது.

65 ஆண்டுகளாக நடத்தப்பட்டுவந்த தொழுகை - ஒரு ஆர்ப்பாட்டத்தின் மூலம் தடுக்கப்பட்டது. வன்முறைகள் இடம் பெறாமல் தடுப்பதற்காக என்று கூறி- பள்ளிவாசலை பொலிஸார் மூடினர். 65 ஆண்டுகளாக இயங்கும் பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமைத் தொழுகை நடத்துவதற்கு பொலிஸார் பாதுகாப்பு கொடுத்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் போராட்டம் நடத்தியவர்கள் சார்பில் நின்று தொழுகையை நிறுத்தி பள்ளிவாசலை மூடினர். இந்தப் பள்ளிவாசல் தம்புள்ள புனித பிரதேசத்துக்குள் இருப்பதாகவும் அவர்கள் கூறுகிறார்கள். இதுமட்டுமல்ல இந்துக் கோவிலும்கூட, அகற்றப்பட வேண்டிய- அவர்களின் பட்டியலில் உள்ளது. இவையெல்லாம் 6 மாதங்களுக்குள் இடித்து அழிக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இன்போ தமிழ்

அதேவேளை காணி அமைச்சர் ஜனஹ பண்டார தென்னக்கோன் இந்து ஆலயமும், பள்ளிவாசலும் புனிதப் பிரதேசத்தில் இல்லை என்று கூறியுள்ளார். தம்புள்ளப் புனிதப் பிரதேசம் முழுவதும் சிங்கள பௌத்தர்களுக்கே சொந்தம் என்று பேரினவாதிகள் கொக்கரிக்கின்றனர். வேறு இனத்தவர்களுக்கு அங்கு இடமில்லை என்றும், முஸ்லிம் மக்களின் கடைகளில் பொருட்களை வாங்கக்கூடாது என்றும் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவையெல்லாம் சில பௌத்த பிக்குகள் மற்றும் பேரினவாத சக்திகளால் மேற்கொள்ளப்படும் முயற்சியாக இருந்தாலும், பள்ளிவாசலை அங்கிருந்து அகற்றுவது என்று முடிவெடுத்தது பிரதமர்தான்.

**போருக்குப்பின்னர் மூன்று இனங்களும் நல்லிணக்கத்துடன் வாழ்கின்றன என்று அரசாங்கம் கூறிக்கொண்டிருந்தாலும், அதற்கான சூழல் இன்னமும் இலங்கையில் உருவகவோ, உருவாக்கப்படவோ இல்லை.**




யாழ்ப்பாணத்தில் போய் நின்று இன நல்லிணக்கம் குறித்தும், நாடு முழுவதும் எல்லோருக்கும் சொந்தம், யாருக்கும் எந்தப்பகுதியும் சொந்தமில்லை என்றும் கூறிய பிரதமரே, தம்புள்ள புனிதப் பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கு இடமில்லை என்கிறார். எப்படித்தான் அரசாங்கம் இனவாதத்தை கட்டுப்படுத்திக் கொண்டாலும், அது அவ்வப்போது வெளிப்பட்டுத்தான் வருகிறது. முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் இவ்வாறு வழிபாட்டுக்கு மறுக்கப்படுவது அல்லது தாக்கப்படுவது இதுதான் முதல் முறையல்ல. அனுராதபுரத்தில் ஒரு தர்கா அண்மையில் இடித்து அழிக்கப்பட்டது. அதுபோல் மேலும் சில நாசவேலைகள் நடந்தேறியுள்ளன. இந்தளவுக்கும் அதிகளவு முஸ்லிம் பிரதிநிதிகள் அரசாங்கத்தில் உள்ளனர். அமைச்சர்களாகவும் இருக்கின்றனர். நீதி அமைச்சராக ரஃப் ஹக்கீம்தான் இருக்கிறார். ஆனால், அவரால் நீதியை நிலைநாட்ட முடியவில்லை. இது தனியே முஸ்லிம்களுக்கு எதிரான நிலை என்றில்லை. பௌத்த சிங்களம் தவிர்ந்த பிற மத, இனத்தவர்கள்மீதான ஒடுக்குமுறைகள், இலங்கையில் இன்னும் முடிவுக்கு வரவில்லை என்பதை வெளிப்படுத்தும் ஒரு ஆதாரமே இது.

தமிழர்கள் வாழும் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதும், அங்கு பௌத்த சின்னங்களை நிறுவுவதும் தொடர்கதையாகவே உள்ளது. வடக்கில் புனிதமான இந்து ஆலயச்சுற்றாடல்கள் பலவற்றில் இப்போது புத்தர் சிலைகள் முளைத்துள்ளன. மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், கீரிமலை நகுலேஸ்வரம், பொன்னம்பல வரதராஜப்பெருமாள் கோவில், நயினாதீவு நாகபூசனி அம்மன் ஆலயம் போன்றவற்றின் சுற்றாடலிலும், கனகராஜன் குளத்தில், மாங்குளத்தில், மடுமாதா தேவாலயச் சூழலில், இப்போது திருக்கேதீஸ்வரத்தில் என்று தமிழர் இறைசந்நிதிகளில் இப்போது பௌத்த சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதையெல்லாம் அரசாங்கம் இனநல்லிணக்க முயற்சியாக காட்டினாலும் தமிழர்கள் இவற்றை தம்மீதான ஆதிக்கச் சின்னமாகவே கருதுகிறார்கள்.

தமிழர்களின் வாழ்விடங்களில், இந்து, கிறிஸ்தவ சமயத்தவர்களின் புனித இடங்களுக்கருகே, விகாரைகளையும், புத்தர் சிலைகளையும் நிறுவியதை நியாயமாகக் கருதும் அரசாங்கம், தம்புள்ளவில் 65 ஆண்டுகளாக இருந்துவரும் பள்ளிவாசலின் இருப்பை நியாயமாக கருதுமுடியாது போனது வேடிக்கை. இங்குள்ள பள்ளிவாசலும், இந்துக் கோவிலும் இடம் மாற்றப்படுவது போன்று, வடக்கில் கட்டப்பட்ட விகாரைகளையும் இடிக்க அரசாங்கம் தயாராக இருக்குமா? போருக்குப் பின்னர், இனநல்லிணக்கம் என்பது வெறும் பேச்சளவில்தான் இருக்கிறது. அரசாங்கத்துக்கு எல்லா வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கும் முஸ்லிம்களுக்கே இந்த நிலை என்றால் தமிழர்களின் நிலையை கேட்கவே வேண்டியதில்லை.

தமிழர்களுக்கு ஏற்பட்ட அழிவுகள், அநீதிகளையெல்லாம் நேரில் கண்டிருந்தும்கூட, தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்க வலியுறுத்தும் தீர்மானம ஐ.நா.வில் வந்தபோது, அதனைத் தோற்கடிக்க முஸ்லிம்கள் அரசாங்கத்தோடுதான் நின்றார்கள். வடக்கிலும், கிழக்கிலும் தம்மோடு இணைந்து வாழும் தமிழர்களை விட, அரசாங்கத்தின்மீதே அதிக பற்றும் நம்பிக்கையும் கொண்டதற்கு, அவர்களுக்கு மிகப்பெரிய தண்டனையைக் கொடுத்துள்ளது சிங்கள பௌத்த பேரினவாதம். போருடன் இனவாதம், மதவாதம் என்பனவும் முடிந்துவிட்டதாக அரசாங்கம் கூறிவந்தது பொய் என்பது இப்போது உறுதியாகியுள்ளது. இது சிங்கள பௌத்த நாடு என்றும் சிங்கள பௌத்தர்களுக்கே சொந்தம் என்றும் எழுகின்ற குரல்கள், இந்நாடு முழுவதும் இங்குள்ள எல்லா இனங்களுக்கும் சொந்தம் என்று கூறிய அரசாங்கத்தின் கொள்கையை வலுவிழக்கச் செய்துவிட்டது. ஒரு கட்டத்தில் இனவாதம் பேசி சிறுபான்மையினர் அடக்கப்பட்டனர். பின்னர், இனநல்லிணக்கத்தின் பேரால் அது நடந்தது. இப்போது மீண்டும் இனவாதம் கையில் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நிரந்தரமான அமைதியை எதிர்பார்க்கும் சர்வதேச சமூகத்திற்கு இது பெரும் ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது. மேலும் இலங்கைக்குப் பின்னால், நின்று உதவிய முஸ்லிம் நாடுகளை அதிருப்தி கொள்ள வைத்



துள்ளது. தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம் சர்வதேச அரங்கில் இலங்கையைக் காப்பாற்ற முயற்சி மேற்கொண்ட முஸ்லிம் தலைமைகளுக்கும் முஸ்லிம் நாடுகளுக்கும் விழுந்த பேரிடியாகும்.

# ஐ.நா.பேரவையில் தீர்மானத்திற்கு ஆதரவளித்த நாடுகளின் பதவி நீடிப்பு

## உற்சாகத்தில் இலங்கை

(கொழும்பு)

**ஜெனீவா தீர்மானத்தின் போது இலங்கைக்கு ஆதரவளித்த சீனா, ரஷ்யா, கியூபா, சவுதி அரேபியா, பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகள் கூடுதலாக ஆறு மாதங்கள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய உறுப்பு நாடுகளான இவற்றின் சுழற்சி முறைப் பதவிக்காலம் வரும் ஜூன் மாதத்துடன் நிறைவடையவுள்ளது. ஆனால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் தெரிவு தொடர்பாக கொண்டு வரப்பட்டுள்ள புதிய தெரிவு முறையால் டிசெம்பர் வரை இந்த நாடுகள் பதவிக்கால நீடிப்பைப் பெறவுள்ளன.

இதுவரை மே மாதம் வாக்களிப்பு நடத்தப்பட்டு ஜூன் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பதவிக்காலம் ஆரம்பமாவது வழக்கமாக இருந்தது.

ஆனால் புதிதாகக் கொண்டு வரப்பட்டுள்ள தெரிவு நடைமுறை டிசெம்பர் மாதம் வாக்களிப்பு நடத்தப்பட்டு ஜனவரியில் பதவியேற்கும் வகையில் அமைந்துள்ளது. இதனால் இந்தமாதம் புதிய உறுப்பு நாடுகளுக்கான தேர்தல் நடைபெறாது என்றும் டிசெம்பரிலேயே இதற்கான வாக்களிப்பு நடைபெறும் என்றும் தெரிகிறது.

இதன்காரணமாக கடந்த மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு ஆதரவளித்து ஐந்து நாடுகள் டிசெம்பர் வரை பதவியில் இருக்கப் போகின்றன.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்த மீளாய்வுக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு நெருக்கடிகள் அதிகம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் ரஷ்யா, சீனா, கியூபா போன்ற நாடுகளுக்குக் கிடைத்துள்ள ஆறு மாதகால பதவி நீடிப்பு இலங்கைக்கு தைரியத்தைக் கொடுக்கும் என்று கருதப்படுகின்றது. (அ-2)

## இந்தியா செல்ல முற்பட்ட இந்தியப் பிரஜை கைது

(கொழும்பு)

போலி ஆவணங்களை சமர்ப்பித்து இந்தியா நோக்கிச் செல்ல முயன்ற இந்தியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலைய குற்றத் தடுப்புப் பிரிவினர் குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர். சந்தேக நபர் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

குற்றத் தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## அரசாங்க அலுவலர்களுக்கான ஆக்கத்திறன், கலைத்திறன் போட்டி

கிளிநொச்சி மாவட்டப் பண்பாட்டுப் பேரவையினால் கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் அரசாங்க அலுவலர்களுக்கான ஆக்கத்திறன் மற்றும் கலை வெளிப்பாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். இதில் ஓவியம் , கட்டுரை, கவிதை ,தனிநடிப்பு , பேச்சு , தனிநடனம் , சிறுகதை , கையெழுத்துச் சஞ்சிகை , நடனம் , பட்டிமன்றம் , கவியரங்கம் , நாடகம் , வில்லுப்பாட்டு , தனிபாடலிசைக்கும் போட்டி என்பன நடத்தப்படவுள்ளன. இப்போட்டிகளில் கிளி. மாவட்டத்தில் கடமையாற்றுபவர்கள் மட்டுமே வயது வேறுபாடின்றி பங்குகொள்ள முடியும் என்பதுடன் சொந்த ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

மேலும் அரசியல் , இன , மத பேதமற்றதாக ஆக்கங்கள் அல்லது செயற்பாடுகள் அமைந்திருக்க வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற அரசாங்க அலுவலர்களுக்கு இடையிலான ஆக்கத் திறன் அல்லது கலை வெளிப்பாட்டுப் போட்டிகள்- 2012 என தலைப்பிடப்பட்டு முழுப்பெயர், கடமைபுரியும் அலுவலகம் அல்லது பாடசாலை , முகவரி , தொலைபேசி இலக்கம் , பதவி, பங்குபற்றும் போட்டி என்பன உள்ளடங்கலாக போட்டியாளரின் ஒப்பந்தத்துடன் திணைக்கள தலைவர் அல்லது அதிபரின் உறுதிப்படுத்தலுடன் கூடிய விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்து விண்ணப்ப கட்டணம் 100 ரூபாவையும் செலுத்தி எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேற்படி விண்ணப்பப்படிவத்தினை உரிய திகதியிலும் ஓவியம் , கட்டுரை , கவிதை , சிறுகதை , கையெழுத்துச் சஞ்சிகை ஆகியவற்றிற்கான ஆக்கங்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னரும் அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம் , கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவ கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஆக்கத்திறன் போட்டிகள் -2012 எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

## ஈரான் உயர்மட்ட தூதுக் குழுவினர் உள்ளூர் உலமாக்களுடன் சந்திப்பு

(கொழும்பு)

ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஆன்மீக தலைவரின் கலாசார விவகாரங்களுக்கான ஆலோசகரும் சமயப் பிரிவுகளுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் உலகப் பேரவையின் செயலாளர் நாயகமுமான ஆயத்துல்லாஹ் தஷ்கீரி தலைமையிலான தூதுக்குழு சென்ற வாரம் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தது.

கொழும்பிலுள்ள ஈரான் கலாசார நிலையத்தின் ஏற்பாட்டில் உள்ளூர் உலமாக்களை சந்தித்து கலந்துரையாடியது.

ஈரான் கலாசார நிலையத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் ஆயத்துல்லாஹ் தஷ்கீரி ஹஜ்ஜதுல் இஸ்லாம் ஷபீயீ நியா மற்றும் கொழும்பிலுள்ள ஈரான் தூதுவர் ஹஸனி மற்றும் ஈரான் கலாசாரப் பிரிவு பணிப்பாளர் மெஹ்தி. ஜி.ரொக்னி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-2)

மலேரியா அற்ற இலங்கை - 2014

மலேரியா விழிப்புணர்வு நடைப்பேரணி

11.05.2012 காலை 9.30 மணி

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

செய்தி

மருந்தூட்டப்பட்ட நுளம்பு வலையினுள் உறங்குவோம்.

மலேரியா விழிப்புணர்வு கண்காட்சி

11.05.2012 காலை 10.30 மணி யா/இந்துக் கல்லூரி

## பௌதீகவியல் இலவச கருத்தரங்கு இன்று

கொக்குவில் பொது நூலகத்தின் மேம்பாட்டு நிகழ்வாக உயர்தர மாணவர்களுக்கான பௌதீகவியல் (இலத்திரனியல்) பாடத்திற்கான இலவச கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் திருமதி. பாக்கியம் மாணிக்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இக் கருத்தரங்கின் வளவாளராக ஆசிரியர் செந்தில்குமார் கலந்து கொள்வார். எனவே அனைத்து விஞ்ஞானப் பிரிவு, கணிதப்பிரிவு உயர்தர மாணவர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கொக்குவில் நூலகர் திருமதி பி.பாலபாஸ்கரன் அறிவித்துள்ளார். (அ-9)







# மலையரசனும் மலையரசியும்

## அம்புலி மாமா கதைகள்



மகேந்திரகிரி ராஜ்யமெங்கும் மக்கள் வியப்புக்கடலில் மூழ்கினர். எங்கு நோக்கினும் யாரை நோக்கினும் ஒரே விடயத்தைப் பற்றி ஆச்சரியத்துடன் பேசிக் கொண்டு இருந்தனர். நேற்று வரை தனித் தனியாக இருந்த இரு பிரம்மாண்டமான மலைகள் இன்று திடீரென ஒன்றாக இணைந்து விட்டன. இப்படியெல்லாம் கூட நடக்க முடியுமா என்று மக்கள் வாய் ஓயாமல் பேசிப் பேசியே அலுத்து விட்டனர். இந்த விடயத்தைக் கேட்ட மகேந்திரகிரி மன்னர் இந்திரசேனர் அந்த அதிசயத்தைத் தன் கண்களால் காண்பதற்காக அங்கே வந்து சேர்ந்தார். இரண்டு மலைகளும் ஒன்றிணைந்து காட்சியளித்ததைக் கண்டு தன் கண்களையே அவரால் நம்ப முடியவில்லை.

ராஜ்யத்தின் தென் திசையில் பல நூற்றாண்டுகளாக சுகந்தகிரி,சுதர்சனகிரி என்ற இரு பெரிய மலைகள் அதிக இடைவெளியில் அமைந்திருந்தன. இரண்டிலிருந்தும் வேகமாக கீழ்நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்த அருவிகள் நிலத்தை அடைந்து ஒன்றாகச் சேர்ந்து நதியாக மாறி இரண்டு மலைகளுக்கும் இடையில் பாய்ந்து சென்றது. நேற்று வரை தனி துருவங்களாக நின்று கொண்டிருந்த மலைகளிரண்டும் இன்று எவ்வாறு இணைந்தது என்ற தன் சந்தேகத்திற்கு விடை கிடைக்காத மன்னர் இயற்கை அழகு பொழிந்த அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே இருந்தார். அப்போது திடீரென ஒரு தேவன்



அவர் முன் தோன்றினான்.

அவனை வணங்கிய மன்னர் மகா புருஷரே! நீங்கள் நிச்சயம் விண்ணுலகத்தைச் சேர்ந்தவராகத்தான் இருக்க வேண்டும்! நான் இந்த நாட்டு மன்னன் இந்திர சேனன். நேற்றுவரை தனித்தனியாக இருந்த சுகந்தகிரியும். சுதர்சனகிரியும் இன்று திடீரென ஒன்று சேர்ந்தது எவ்வாறு என்று எண்ணி எண்ணிக் குழம்பிக் கொண்டேயிருக்கின்றேன். நான் காண்பது நிஜம்தானா . இல்லை ஏதாவது கண்கட்டி வித்தையா என்றே புரியவில்லை. உண்மையை அறிந்த நீங்கள் இந்த மர்மத்தை விளக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்! என்றார். அதற்கு அந்த தேவன் புன்னகைத்துக் கொண்டே கட்டாயம் சொல்கின்றேன்! என்று தொடங்கினான். இரண்டு மலைகளில் சுகந்தகிரி பல மலர்ச்செடிகளும் பச்சைப்பசேல் என்ற செடி கொடிகளும் பழ மரங்களும் நிறைந்த இயற்கை எழில் மிக்க மலை. இந்த மலைமீது ஏறுவது எளிது. ஆனால் சுதர்சனகிரி பாறைகள் நிரம்பிய செங்குத்தான மலை. அங்கும் செடி கொடி மரங்கள் இருப்பினும் மக்களை மயக்கும் வசீகர அழகு அதற்கில்லை. அதனால் சுற்றுலாப் பயணிகள் பெரும்பாலும் சுகந்தகிரிக்கே சென்று வந்தனர். சுகந்தகிரி மலையரசி வசிக்குமிடம். மலையரசி தாயைப் போன்ற கருணை உள்ளம் படைத்தவள். தன் மீது விருப்பம் கொண்டு தன்னைக் காணவரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தன்னாலியன்ற உதவிகளைச் செய்வாள். ஆனால் மனிதர்களின் கண்களுக்குப் புலப்படமாட்டாள். தன்னை நாடி வரும் பயணிகளின் பொருட்டு அவர்களுக்குப் பயணத்தின் போது கஷ்டம் எதுவும் ஏற்படக் கூடாதென்றும் மகிழ்ச்சியாக வீடு திரும்ப வேண்டுமென்றும் அவள் கடவுளைப் பிரார்த்தனை செய்வாள்.

பயணிகள் கூட்டம் கூட்டமாக சுகந்த கிரியையே நாடிச் செல்வதையும் தன்னை நாடி யாரும் வராததையும் கண்டு அருகிலிருந்த சுதர்சனகிரியின் மன்னனான மலையரசனுக்கு வருத்தம் ஏற்பட்டது. கடந்த சித்திரா பௌர்ணமியன்று ஏராளமான பயணிகளின் கூட்டம் சுகந்தகிரிக்கு வந்த போது மலையரசனுக்குச் சிறிது பொறாமை கூட ஏற்பட்டது.

மலையரசி அவர்களின் கண்களுக்கு தென்படாமல் இங்குமங்குமாகத் திரிந்து அனைவரும் எந்தவிதக் கஷ்டமுமின்றி உல்லாசமாகப் பொழுது போக்கியபின் வீடு திரும்ப வேண்டுமென்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்ததையும் மலையரசன் பார்த்தார். அப்படியிருந்தும் சுகந்தகிரியில் ஏறிக் கொண்டிருந்த ஒருவன் தற்செயலாகக் கால் இடறி தலைக்குப்புற பாதாளத்தில் விழுந்தான். அதைக் கண்டு பதறிப் போன மலையரசி அவனை ஏந்திப் பிடிக்கத் தன் கைகளை நீட்டியும் அவனைப் பிடிக்க முடியவில்லை.

அதைப் பார்த்த மலையரசன் மிக நீளமான தன் கைகளை நீட்டி அவனைத் தாங்கிப் பிடித்துக் கொள்ள அவன் உயிர் தப்பினான். பயந்து நடுங்கி கதறியழுத அவனுடைய மனைவியும் குழந்தைகளும் பாதாளத்தில் தலைக்குப்புற விழுந்தவன் தெய்வாதீனமாகப் பிழைத்தது கண்டு மகிழ்ச்சி அடைந்தனர். அதைக் கண்ட மலையரசியும் உணர்ச்சி வசப்பட்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

பின்னர் தன்னைப் பார்க்க வந்த பயணியின் உயிரைக் காப்பாற்றிய மலையரசனுக்கு அவள் மனமார நன்றி செலுத்தினாள். அப்போது மலையரசன் அவளை நோக்கி, மலையரசி! உன்னை நாடி இத்தனை மக்கள் வரும் போது என்னை நாடி ஏன் யாரும் வருவதில்லை என்று பல நாட்களாக யோசி



த்துக் கொண்டிருந்தேன். அதற்கான காரணத்தை நான் இன்று அறிந்து கொண்டேன். உன்னுடைய இதயம் புனிதமானது. தூய சிந்தனைகளால் நிரம்பியது. உன்னை நாடி வருபவர்களிடம் ஒரு தாயைப் போல் அன்பு செலுத்துகிறாய். உன் பயணிகளை உன் குழந்தைகளாக பாவிக்கிறாய். அதனால் தான் நீ மிக அழகாகவும் குளிர்ச்சியாகவும் இருக்கிறாய் என்றார். அதற்கு மலையரசி நாணத்துடன் நீங்களும் என்னை போல் நடந்து கொள்ள முயற்சிக்கலாமே! பின்னர் உங்களை நாடிப் பலரும் வருவார்கள்! என்றாள்.

ராணி! உன்னைப் போல் நானும் மாற வேண்டுமானால் அதற்கு ஒரு வழி இருக்கிறது. நீ மனது வைத்தால் அது நடக்கும்.

நான் விரும்புவதை உன்னால் தர முடியுமா? என்றார் மலையரசன்! எனக்கு பேருதவி புரிந்த நீங்கள் என்னிடம் எது கேட்டாலும் நான் தரத் தயாராக இருக்கிறேன்! என்றாள் மலையரசி. அப்படியானால் என்னைத் திருமணம் செய்து கொள்வாயா? என்று மலையரசன் கேட்டதும் மலையரசியின் முகம் மகிழ்ச்சியினால் பூரித்து வெட்கத்தினால் சிவந்தது. உங்களை திருமணம் செய்து கொள்வதை என் பாக்கியமாக கருதுகிறேன்! என்றாள்.

ஒரு சுபமுகூர்த்தத்தில் இருவருக்கும் திருமணம் இனிதே நடந்து முடிந்தது. இரண்டுமலைகளும் ஒன்றாக சேர்ந்து



கொண்டன. அந்த சுபநிகழ்ச்சியை கொண்டாடும் விதத்தில் மலைப்பிரதேசத்திலிருந்து அத்தனை செடி, கொடி, மரங்களும் பூத்துக் குலுங்கின.

அந்தத் திருமணத்தை காண வந்தவர்களில் நானும் ஒருவன்! திருமணத்திற்கு தேவலோகத்தில் இருந்து பல தேவர்களும் தேவதைகளும் வந்து சிறப்பித்தனர். அவர்களெல்லாம் திருமணம் முடிந்து சென்ற பின்னரும் நான் இங்கேயே பல நாள் தங்கிவிட்டேன். நானும் தேவலோகம் திரும்ப வேண்டியது தான்! ஆனால் போவதற்கு முன் உங்களிடம் இவற்றை கூறியதை எண்ணி மகிழ்கிறேன். மன்னராகிய நீங்கள் ஒரு விடயத்தை புரிந்து கொள்ளுங்கள். நம்மை போலவே இயற்கை உருவாக்கிய மலைகள், நதிகள், தாவரங்கள் ஆகியவற்றுக்கும் உணர்ச்சிகள், அன்பு, இரக்கம் ஆகிய குணங்கள் உள்ளன. இவற்றை தன்னுயிர் போல் நேசித்து வாழும் மனிதர்களிடம் இவையும் அன்பு காட்டுகின்றன. ஆனால் இவற்றை விரோதித்துக் கொண்டு இயற்கைக்கு எதிரான செயல்களை புரிந்தாலோ மனிதகுலமும் அழிந்து போகும்! என்று கூறி அவன் மறைந்து போனான்.

தான் கற்றுக் கொண்ட பாடத்தை தன் குடிமக்களுக்கும் புகட்ட வேண்டுமென்றும் இயற்கையின் படைப்புக்களான மலைகள், நதிகள், மரங்கள் மீதும் பாசமும் பரிவும் காட்ட வேண்டுமென்றும் எண்ணிய மன்னர் ஒவ்வொரு சித்திரா பௌர்ணமியன்றும் மலையரசனுக்கும் மலையரசிக்கும் வசந்தோற்சவ விழாக் கொண்டாட வேண்டும் என்று தீர்மானித்தார்.

# தென்னை செய்கையை ஜப்பானிய பிரதமர் கட்சுயா பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

தென்னைப் பயிர்ச்செய்கையின் முக்கியத்துவம், அதனால் ஏற்படக்கூடிய பயன்பாடுகள் மற்றும் அதனது அபிவிருத்தி தொடர்பாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஜப்பானிய பிரதிப் பிரதமர் கட்சுயா ஒகாடாவுக்கு எடுத்து விளக்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜப்பானிய பிரதிப் பிரதமர் உள்ளடங்கிய குழுவினர் அச்சுவேலியில் அமையப் பெற்றுள்ள தென்னை நாற்று மேடையை பார்வையிட்ட போதே அமைச்சர் குறித்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதன்போது வடபகுதியில் கடந்த கால யுத்தத்தினால் பெருமளவு தென்னைகள் அழிக்கப்பட்டதையும் இதன் பொருட்டு தென்னஞ்செய்கை மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் எடுத்து விளக்கிய அமைச்சர் இது தொடர்பில் நிதியுதவி வழங்கிய ஜப்பானிய அரசுக்கு எமது மக்கள் சார்பில் தனது நன்றிகளை தெரிவித்து கொண்டார்.

அத்துடன் ஜப்பானின் ஜெய்க்கா நிறுவனத்தினால் அச்சுவேலி தென்னைப்பயிர்ச்செய்கை நாற்று மேடை வளாகத்திற்காக 14.6 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட அலுவலகத்தையும் அதிதிகள் பார்வையிட்டனர்.

8 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இந்த நாற்றுமேடை வளாகத்தின் ஒவ்வொரு பகுதிகளையும் பார்வையிட்ட ஜப்பானிய குழுவினர் வளாகத்தில் தென்னை மரக்கன்றுகளை நாட்டி வைத்ததுடன் நிகழ்விற்கு வருகை தந்த ஒரு தொகுதியினருக்கு தென்னங்கன்றுகளையும் ஜப்பானிய பிரதிப் பிரதமர் வழங்கினார்.

(அ-2)

## ஓய்வூதியர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் ஓய்வூதியர் சங்க கூட்டம் நாளை மறுதினம் புதன் கிழமை நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது அங்கத்தவர்கள் அநேகமானோர் சமுகமளிக்காத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் நடைபெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-72)

# இலங்கை தமிழர்களின் புகலிடம் கோரும் நாட்டம் இன்னமும் குறையவில்லை

(கொழும்பு)

தமிழ் மக்களை அரசாங்கம் சீராக கவனிப்பதில்லை என்ற ஓர் நிலைப்பாட்டை தமிழ் புலம்பெயர் சமூகம் வெளிநாடுகளில் உருவாக்கியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அனுதாப அடிப்படையில் புகலிட அந்தஸ்தை பெற்றுக் கொள்வதில் அதிகளவானவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பொருளாதார நன்மைகளை அடைய முடியும் என்ற காரணத்தினால் தமிழர்கள் மட்டுமன்றி சில சிங்களவர்கள் கூட அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் புகலிடம் கோரி வருகின்றனர்.

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். இலங்கைத் தமிழர்களின் புகலிடம் கோரும் நாட்டம் இன்னமும் குறைவடையவில்லை என தெரியவருகின்றது.

யுத்தம் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இன்னமும் சட்டவிரோத வழிகளில் வெளிநாடுகளில் புகலிடம் கோரும் முனைப்புக்களில் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் மக்களின் வாழ்க்கையில் சுபீட்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை அரசாங்கம் பிரசாரம் செய்த போதிலும் உண்மையில் தமிழ் மக்கள் இவ்விடயம் குறித்து திருப்தி அடையவில்லை.

இலங்கை கடற்படையினர் மற்றும் பொலிஸார் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தீடுக்க பல்வேறு வழிகளில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் தமிழர்கள் மேற்குலக நாடுகளில் புகலிடம் கோரும் நாட்டத்தை கைவிடவில்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# மின்சாரம் இன்மையால் இருளில் மூழ்கும் கண்டாவளை பிரதேசம்

(பூந்தோட்டம்)

கண்டாவளை கிராமத்திற்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பரந்தன்,முல்லைத்தீவு வீதிக்கு மின்சார விநியோகம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் கண்டாவளை கிராமத்திற்கு மின்சாரம் வழங்க இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூர்வீக கிராமமான இக்கிராமத்தில் ஏறத்தாழ 400 குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இக்கிராமத்தில் உள்ள கிராமிய வைத்திய சாலைக்கு மின்சாரவசதி இல்லாமையால் வைத்திய சேவையை மேற்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அத்துடன் இங்குள்ள பாடசாலை மாணவர்களும் மின்சாரம் இன்மையால் தகவல் தொழில்நுட்ப பாடத்தை கற்பதில் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே, இக்கிராமத்தில் மின்சார வசதியை பெற்றுக்கொடுக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-266)

# தம்புள்ள பள்ளிவாசல் விவகாரத்தில் முதலை கண்ணீர் வடிக்கின்றார் கலைஞர்

## அஸ்வர் எம்.பி கிண்டல்

அயோத்திய நகரில் பாபர் மசூதி இடித்து தள்ளப்பட்ட போது மௌனம் காத்த தி.மு.க தலைவர் முத்துவேல் கருணாநிதி தம்புள்ள பள்ளிவாசல் விவகாரத்தில் முதலைக் கண்ணீர் வடிப்பது ஏன்? இவ்வாறு ஏ.எச்.எம். அஸ்வர் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

அளுத்கடையில் நடைபெற்ற முஸ்லிம்களுடனான கலந்துரையாடல் நிகழ்வொன்றில் உரையாற்றிய அஸ்வர் எம்.பி. தமிழகத்தில் மீண்டும் அதிகாரத்துக்காக வருவதற்காகவும் முதல்வர் ஜெயலலிதாவின்அரசியல் தந்திரங்களை தவிடுபொடியாக்குவதற்காகவும்தான் சிறுபான்மை மக்களின் பாதுகாவலன் எனக் காட்டிக் கொள்ள முயற்சிக்கின்றார்.

கருணாநிதியின் இந்த நடவடிக்கை சர்வதேச சதித்திட்டத்தின் ஓர் அங்கமே வடக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் இரவோடிரவாக விரட்டப்பட்ட போதும் காத்தான்குடி ஏறாவூரில் பள்ளிவாசல்களில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டபோதும் வாளாவிருந்த கலைஞர் இப்போது முஸ்லிம்களுக்காக நீலிக் கண்ணீர் வடிப்பது தான் புதிராகவுள்ளது.

தம்புள்ள பள்ளிவாசல் விவகாரத்தில் முஸ்லிம் அமைச்சர்களும் மக்கள் பிரதிநிதிகளும் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகீன்றனர். அரசாங்கமும் ஜனாதிபதியும் இதற்கான தீர்வை பெற்று தருவரென முஸ்லிம்கள் பெரிதும் நம்புகின்றனர். எனவே இறைமையுள்ள இந்நாட்டின் உள்விவகாரங்களில் கலைஞர் மூக்கை நுழைப்பது ஆரோக்கியமானதல்ல என்று அவர் தெரிவித்தார்.(அ-2)

# கூட்டமைப்பு தலைவரின் குற்றச்சாட்டு அடிப்படையோ ஆதாரமோ அற்றது

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தனின் கருத்து பிழையானது என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேடுதல் வேட்டைகள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் புலிகளின் அனுமதியின்றி சம்பந்தனினால் யாழ்ப்பாணம் செல்ல முடியாத நிலைமை காணப்பட்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். புலிகள் சிறுவர், சிறுமியரை ஆயுத போராட்டத்தில் ஈடுபடுத்திய போது சம்பந்தன் அதற்கு எதிராக குரல் கொடுக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

படையினரும் இராணுவத்தினரும் சட்ட ரீதியான முறையில் மேற்கொண்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விமர்சனம் செய்து வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

யுத்த நிறைவின் பின்னர் நாட்டில் பூரண சமாதானம் நிலவி வருவதாகவும் அதனை சம்பந்தன் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

(அ-2)



சர்வதேச ஊடக தினம் கடந்த வியாழக்கிழமை யாழ்.திருமறைக்கலாமன்றத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் பயஸின் காலக்கிறுக்கல் நூல் பிரதியை அவரது மனைவி மற்றும் மகன் வெளியிட்டு வைப்பதையும் அதனை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் பெற்றுக் கொள்வதனையும் வெளியீட்டு உரையை யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் விரிவுரையாளர் ஆ.சபேஸ்வரன் நிகழ்த்துவதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் (படங்கள்:-எஸ் செல்வதீபன்)

# கூட்டமைப்பை சமாதானப்படுத்துவதற்காக கொள்கையை விட்டுக்கொடுக்க முடியாது

## சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தகவல்

(கொழும்பு)

கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேடுதல் நடவடிக்கைகளின் போது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் 38 பேர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாக இலங்கை பொலிஸ் தரப்பின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

போருக்குப் பிந்திய புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு உள்ளாகாமல் இருக்கும் முன்னாள் போராளிகளைக் கண்டுபிடிக்க தேடுதல் நடத்துவதை விட இலங்கை அரசுக்கு வேறு வழியில்லை. கிழக்கில் அண்மையில் நடத்தப்பட்ட தேடுதல்களின் போது 100 பேர் வரை விசாரிக்கப்பட்டனர்.

அவர்களில் 38 பேர் தடுத்து வைக்கப்பட்டு தீவிரவாத விசாரணைப் பிரிவு பொலிஸாரினால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். கிழக்கில் தேடுதல்களின் போது கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் விவகாரத்தில் தலையிட்டு அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை ஜனாதிபதிக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா. சம்பந்தன் கடிதம் எழுதியிருந்தார்.

ஆனால், ஒரு காலத்தில் விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை சமாதானப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் தனது பாதுகாப்புக் கொள்கையை விட்டுக் கொடுக்காது என்றும் அந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

(அ-2)

## திவிநெகும தேசிய திட்டத்தில் பாடசாலை மாணவர்களும்

(கொழும்பு)

திவிநெகும தேசிய திட்டத்தில் பாடசாலை மாணவர்களையும் இணைத்து கொள்ளும் முகமாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக, கல்வித்துறை உயர் மட்ட அதிகாரிகளுடனான சந்திப்பு ஒன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மாணவர்களுக்கு தூய பசும்பாலை வழங்கும் திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்கான செலவீனத்தை பொறுப்பேற்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சு முன்வந்துள்ளது.

(அ-2)

## வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள புலிகளை கைது செய்து ஒப்படையுங்கள்

## இன்டர் போலிற்கு கோத்தபாய கடிதம்

வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களையும் செயற்பாட்டாளர்களையும் கைது செய்து ஒப்படைக்குமாறு அரசு சர்வதேச பொலிஸான இன்ரபோலிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வெளிநாடுகளில் உள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் சர்வதேச ரீதியில் இலங்கை அரசுக்கு எதிராகக் கடுமையான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதால் அரசாங்கம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளதாக தெரியவருகிறது.

இது தொடர்பான கடிதத்தை பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சர்வதேச பொலிஸ் தலைமையகத்திற்கு அனுப்பியுள்ளார். நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் நடவடிக்கையில் சர்வதேச நாடுகளில் வாழும் புலி உறுப்பினர்கள் ஈடுபடுவதால், அதனைத் தடுத்து நிறுத்தி அவர்களின் செயற்பாடுகளை முடக்கும் நோக்கில் அவர்களை கைதுசெய்து தங்களிடம் ஒப்படைக்குமாறு கோத்தபாய இன்ரர்போலிடம் கேட்டுள்ளார்.

வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் பெற்றுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீண்டும் அந்த அமைப்பின் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நோக்கில் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் அதனைத் தடுத்து நிறுத்தாவிட்டால் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும் என்றும் பாதுகாப்பு செயலாளர் இன்ரபோலுக்கு கடிதம் எழுதியுள்ளதாக அறியமுடிகின்றது.

(அ-2)

## நீதிமன்ற உத்தரவையும் மீறி நவலோகவில் உள்ள சரத்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை நவலோக தனியார் வைத்தியசாலையிலிருந்து தேசிய வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கு எதிரான வழக்கு நாளை மறுதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

உயர்நீதிமன்றத்தில் ஐந்து பேர் கொண்ட நீதியரசர் குழு இந்த விசாரணையை நடத்தவுள்ளது. தமக்கு பிணை வழங்கப்பட வேண்டும் என்று சரத் பொன்சேகா உயர்நீதிமன்றத்தில் மனுசெய்துள்ளார்.

எனினும் கடந்த வாரம் இது விசாரணைக்கு வந்தபோதும் நீதியரசர்கள் சிலர் வெளிநாடு சென்றுள்ளமையால் விசாரணையை நாளை மறுதினத்திற்கு ஒத்தி வைத்தனர்.

இதற்கிடையில் சரத் பொன்சேகா நுரையீரல் சிகிச்சையின் நிமித்தம் வைத்தியசாலையில் தங்கியிருக்க உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியது. ஆனால், சிறைச்சாலைகள் ஆணையாளர், தனியார் வைத்தியசாலையான நவலோகவில் சரத் பொன்சேகா தங்கியிருந்து சிகிச்சை பெறுவதை ஆட்சேபித்து கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழங்கு தாக்கல் செய்தார்.

பாதுகாப்பு பிரச்சினையே இதற்குக் காரணம் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இதனை ஏற்றுக் கொண்ட கொழும்பு மேல் நீதிமன்றம், சரத் பொன்சேகாவை தேசிய வைத்தியசாலைக்கு மாற்றுமாறு உத்தரவிட்டது.

எனினும் நீதிமன்ற உத்தரவையும் மீறி சரத் பொன்சேகா தொடர்ந்தும் நவலோக வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாக அவ்ரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

(அ-2)

## ஒருமித்து குரல்கொடுக்க முஸ்லிம் அமைப்புக்கள் ஒன்றுகூடி தீர்மானம்

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தலைமையின்கீழ் முஸ்லிம் குழு மற்றும் முஸ்லிம் சிவில் அமைப்புக்கள், சங்கங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து ஒரே குரலில் இயங்குவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான முக்கிய கூட்டம் ஒன்று அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது.

ஜம்இய்யதுல் உலமாவின் முக்கியஸ்தர்கள் முஸ்லிம் குழுவில் மற்றும் பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று கருத்துக்களை வழங்கினர். முஸ்லிம்கள் தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்கு ஒருமித்த குரலில் பேசுவதற்கும் சரியான தீர்வுகளை பெற்றுக் கொள்வதற்கும் இவ்வாறான அமைப்பு அவசியம் என வலியுறுத்தப்பட்டது.

இந்த முயற்சிக்கு அரசியல் வாதிகளின் ஒத்துழைப்பை பெறுவதெனவும் முஸ்லிம் தலைவர்களின் ஆலோசனையை உள்வாங்கி இந்த அமைப்பை வலுப்படுத்துவது பற்றியும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

(அ-2)

## பொது அமைப்புக்கள் பிரதேச செயலாளரின் கீழ் இயங்க மறுப்பது தொடர்பில் மக்கள் விசனம்

(பூந்தோட்டம்)


வவுனியா மாவட்டத்தில் உள்ள சில பொது அமைப்புக்கள் நிதி மோசடி மற்றும் சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதை தவிர்ப்பதற்கு பிரதேச செயலாளரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்க வேண்டிய தேவையுள்ளது. எனினும் சில பொது அமைப்புக்கள் பிரதேச செயலாளரின் கீழ் இயங்க மறுப்பது விசனத்துக்குரியது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்து கலாசார திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆலயங்கள் பிரதேச செயலாளரின் கீழ் இயங்க வேண்டிய தேவையுள்ளபோதிலும் சில ஆலயங்கள் அதனை மறுத்துரைப்பதும் பிரதேச செயலாளரினால் கூட்டம் கூடுமாறு கோரப்படும் கோரிக்கைகளை நிராகரிப்பதும் தவறான செயற்பாடுகளுக்கு வழிவகுக்க கூடும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியதுடன் பிரதேச செயலாளரின் கோரிக்கைகளை நிராகரிப்பதும் அதனை உதாசீனப்படுத்துவதும் பொது அமைப்புக்கள் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு பாதகமாக அமையுமெனவும் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே, வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள பொது அமைப்புக்கள் பிரதேச செயலாளரின் கீழ் அவரது அதிகாரங்களுக்குட்பட்டு செயற்பட வேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர்.

(அ-2-266)



கோபி ஏஜென்சி நிறுவனத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்த அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு வவுனியா றோயல் காடின் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் வெற்றியாளர் ஒருவருக்கு எம்.எம்.பி.எல். நிறுவனத்தின் தேசிய விற்பனை முகாமையாளர் அசங்க அம்பலன்னொட, இவ் ஏஜென்சி அதிபர் சந்திரகுமார் ஆகியோர் இணைந்து பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

> கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்
>
> – சுபாஸ் சந்திரபோஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இந்து இளைஞர்களே! சமயம் காக்க வாருங்கள்

அன்புக்குரிய இந்து இளைஞர்களுக்கு, தாளமுடியாத வேதனையோடு இந்த மடலை எழுதுகின்றோம்.

எழுதுவதால் ஏதேனும் பிரயோசனம் உண்டா? என்று கேள்வி எழுப்பினால் அதற்கான பதில் 'இல்லை' என்பதாகக் கூட இருக்க முடியும்.

இருந்தும் எழுதுவதையும் நிறுத்திவிட்டால் அது படுமோசமாகிவிடும் என்பதின் அடிப்படையில் இக்கடிதத்தை எழுத நேர்ந்தது.

அன்புக்குரிய இந்து இளைஞர்களே! இந்த உலகம் முழுவதிலும் உள்ள சமயங்களை எடுத்துக் கொண்டு எந்த சமயத்தில் இளைஞர்கள் நாட்டம் குறைந்தவர்களாக – சமயப்பற்று இல்லாதவர்களாக இருக்கின்றார்கள் என்றொரு ஆய்வு நடத்தினால், அதன் முடிபு இந்துசமயம் என்பதாகவே இருக்கும்.

அது எந்த நாட்டில் அதிகம் என்ற அடுத்த ஆய்வு வினாவுக்கான பதில் இலங்கை என்பது முடிபாகவரும்.

எமது அருமை இந்து இளைஞர்களே! ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்; பெளத்த இளைஞர்கள் கிரமமாக பன்சாலைக்குச் சென்று பிரார்த்தனை நடத்துகின்றனர்.

கத்தோலிக்க இளைஞர்கள் ஒவ்வொரு ஞாயிறும் தங்கள் தொழிலையும் நிறுத்திவிட்டு தேவாலயத்திற்குச் செல்கின்றனர்.

இஸ்லாமிய இளைஞர்களோ ஐந்து நேரத் தொழுகை, அது தவறினால் வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு, உலகம் அழிவதாக இருந்தாலும் தொழுகை தப்பாமல் நடக்கும்.

சீக்கிய மதத்தை ஒருகணம் பாருங்கள், தங்கள் மதத்தின் அடையாளத்திற்கு அவர்கள் கொடுக்கின்ற முக்கியத்துவத்தை கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங்கின் தலைப்பாகை சுற்றிய தலைமுடியில் இருந்து நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

ஆனால், எங்கள் இந்து இளைஞர்களை எப்படிக் கண்டு கொள்வது. நாங்கள் பிரார்த்தனைக்காக மாதத்தில் ஒரு தடவையேனும் கோயிலுக்குச் செல்லும் பழக்கம் உடையவர்களா?

ஏன்தான் இப்படி. சமயப்பற்றில்லாத உங்கள் மனநிலையால் இந்து ஆலயங்கள் – இந்து சமயம் படும் அவலங்களைப் பாருங்கள்.

இப்போதெல்லாம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து ஆலயங்களில் இருக்கக்கூடிய வாகனங்களின் தலைகளை வெட்டிவிடுகின்றார்கள்.

எத்தனையோ இலட்சம் ரூபாய் பெறுமதியான வாகனங்களின் தலையை வெட்டுபவர்கள் யார்? இதுபற்றி இளைஞர்களாகிய நீங்கள் சிந்தித்ததுண்டா?

இப்படியான கொடும் செயலை பன்சாலையில், கத்தோலிக்க தேவாலயத்தில், பள்ளிவாசலில் செய்திருந்தால், இந்த நாடே கலங்கும்படியாக ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் நடைபெற்றிருக்கும்.

ஆனால் இந்து ஆலயங்கள் என்றால் அங்கு களவெடுக்கலாம். அதன் அண்மித்த பகுதி களில் விகாரைகளை நிறுவலாம். வாகனங்களின் தலைகளைக் கொய்யலாம் என்றாகிவிட்டது.

எது நடந்தாலும் யாரும் கேட்கமாட்டார்கள். இந்த நிலைமை மாற்றப்படவேண்டும். இந்து இளைஞர்கள் தங்கள் பிறப்புச் சமயத்தை– இந்து ஆலயங்களை பாதுகாக்க முன்வர வேண்டும். அதற்காக சமண சமயத்தவர்களுக்கு தண்டனை கொடுத்த சம்பந்தராக நீங்கள் மாறினாலும் அது வரவேற்கப்படும்.

தயங்காதீர்கள். இந்து சமயத்தைக் காப்பாற்றுவது உங்கள் தாயை காப்பாற்றுவதற்கு ஒப்பானது.

# இந்து சமுத்திரத்தின் கொலைக்களம் இலங்கைக்கு கிடைத்துள்ள புதிய பெயர்

## கலாநிதி சூசை தெரிவிப்பு

இரத்தின துவீபம், இந்து சமுத்திரத்தின் முத்து என்றெல்லாம் வர்ணிக்கப்பட்ட இலங்கை, இன்று இந்து சமுத்திரத்தின் கொலைக்களம் என்ற கிரிமினல் பட்டத்துடன் சர்வதேச அரங்கில் தலைகுனிந்து நிற்கின்றது என கலாநிதி சூசை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட கட்டுரை வருமாறு,

வரலாற்றில் கறை படிந்த அழிக்க முடியாத அவமானம் இது. வன்னிப் பேரவலம் தொடர்பாக ஐ.நா நிபுணர் வெளியிட்ட அறிக்கையும், சனல் 4 தொலைக்காட்சியில் வெளியான இரு ஆவணங்களும் இதற்குதக்க சான்றுகள்.

நிபுணர் குழுவினர் சாதாரணமானவர்கள் அல்ல. ஆகவே அறிக்கையும் சாதாரணமானவை அல்ல. சனல் 4 இல் வெளியான காணொளியானது தடயவியல் நிபுணர்கள், ஒளி,ஒலி வல்லுநர்கள், வெடிபொருள்சார் நிபுணர்கள் ஆகியோரின் துல்லியமான பரிசோதனையின் பின்னர் வெளிவந்தவை என இதனைத் தயாரித்த கெலம் மெக்ரே கூறுகின்றார்.

உலகத்தின் மனசாட்சியையே உலுக்கிய இவையாவும் போலியானவை என மீண்டும் ஒரு பொய் கூறியுள்ளது இலங்கை அரசு. பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இவைகள் அனைத்தும் போலியானவை எனக் கூறு கின்றார். பேராசிரியர் இவ்வாறு பொய் கூறுவது கல்வி உலகிற்கே பெரும் அவமானம்.

மேற்குறித்த அறிக்கையும் தொலைக்காட்சி ஆவணமும் பொய் எனில், 60 ஆண்டுகளாக, இலங்கை அரசு இலங்கைத் தமிழ் தேசியத்துக்கு இழைத்து வந்துள்ள அத்தனை அநியாயங்களும் அட்டூழியங்களும் பொய்.

கிளாலி பயணிகள் படுகொலை, மண்டைதீவில் குருநகர் மீனவர் படுகொலை, குமுதினிப் படகு கோரக் கொலை, நவாலி தேவாலயப் படுகொலை, நாகர்கோவில் பாடசாலை மாணவர் படுகொலை, செஞ்சோலை சிறுவர் படுகொலை இப்படி பல படுகொலைகள் இவையாவும் பொய். நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை. இலங்கை 60 வருடங்களாக சர்வதேச சமூகத்தின் முன் கூறி வருகின்ற பொய்மொழிகள் இவை.

கடவுளின் பத்துக் கட்டளைகளில் ஒன்று, கொலைசெய்யாதிருப்பாயாக, இன்னொன்று பொய் சொல்லாதிருப்பாயாக எனக் கூறுகிறது.

இலங்கை அரசு கொலைகளையும் செய்துவிட்டு சுத்தப் பொய்யும் கூறி கடவுளின் பத்துக் கட்டளைகளையும் மீறியுள்ளது.

தொடர்ச்சியாக செய்து வரும் படுகொலைகளுக்கும் பொய்களுக்கும் சேர்த்து இன்று. இலங்கைக்கு கிடைத்துள்ள மகத்தான பட்டம் இந்து சமுத்திரத்தின் கொலைக்களம்.

இலட்சக்கணக்கான மக்களை வன்னியில் குறுகிய நிலப்பரப்பினுள் முடக்கி எவரையும் உள்ளே செல்ல அனுமதிக்காது தாம் விரும்பியவாறு தமது காட்டுத்தர்பார் நாடகத்தை நடத்தி முடித்துள்ளது இலங்கைப் படை.

தமது வெறியாட்டம் எவருக்கும் தெரியவாய்ப்பில்லை என்றுதான் அப்போது எண்ணியிருந்தது.

சனல் 4 ஆவணப்படம் வெளிவரத் தொடங்கியபோதுதான் தொலைநுகர்வுத் தொழில்நுட்பம் தமது தலைக்கு மேலே சுழன்று கொண்டிருந்த இரகசியம் தெரியவந்துள்ளது. இப்போது கிலிபிடித்து அதிர்ந்து போயுள்ளது இலங்கை படைத்தரப்பும் அரச தரப்பும்.

சனல் 4 ஆவணப் படத்தின் தொடர் இப்போதுதான் ஆரம்பமாகியிருக்கிறது. கிளைமாக்ஸ் காட்சிகள் இனிப்போகப் போகத்தான் வெளிவரப் போகிறது. மேற்கு ஐரோப்பாவில் ஹிட்லரின் யூதப் படுகொலை, கிழக்கு ஐரோப்பாவில் பொஸ்னிய முஸலிம்களின் படு கொலை, ஆபிரிக்காவில் றுவாண்டா குட்சி இனப் படுகொலை, மேற்கு ஆசியா ஈராக்கில் சதாமின் குர்திஸ் இனப் படுகொலை, தென் கிழக்காசியவில் பொல்பொட்டின் கம்பூச்சிய படுகொலை இந்த வரிசையில் இப்போது தென் ஆசியாவின் கொலைக் களத்தில் தமிழர் படுகொலை.

ஹிட்லர்,பொல்பொட்,சதாம் ஆகியோரின் இழிச்சாவுகளை இலங்கை ஆட்சியாளர்களும் நினைவிற் கொள்வது பொருத்தமானது.

முள்ளிவாய்க்காலில் கோரப்படு கொலை செய்யப்பட்டு புதைகுழியில் போடப்பட்டது தமிழ் தேசியம் மட்டுமல்ல, புத்தரின் அகிம்சையும், இந்தியாவின் காந்தியம், அசோக தர்மமாகும். தவறு செய்தவன் திருந்தப் பார்க்கணும் தப்பு செய்தவன் திருந்தி ஆகணும்.

இங்கே தவறு செய்தவன் திருந்தும் எண்ணம் இல்லை. தப்பு செய்தவன் வருந்தும் எண்ணம் இல்லை என்றுள்ளது.(எ-8)

# மதுரை ஆதீனத்தில் உதவியாளர் மீது தாக்குதல்

மதுரை ஆதீனமடத்தில் ஆதின உதவியாளரான இளம் பெண் வைஷ்ணவி என்பவர் மீது நித்தியானந்தாவின் ஆட்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மதுரை ஆதின மடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை வருமான வரித்துறை அதிகாரிகள் தேடுதல் நடத்திய நேரத்தில், மாலையில் மதுரை ஆதினம் அருணகிரிநாதர் திருவண்ணாமலைக்கு புறப்பட்டுவிட்டார். மாலையில் அங்கு நித்தியானந்தாவுக்கு நடக்கும் பட்டாபிஷேகத்தில் பங்கேற்றார்.

உதவியாளர் வைஷ்ணவியை ஆதின மடத்திலேயே தங்க வைத்த ஆதினம் அருணகிரிநாதர், பாதுகாப்புக்கு நித்தியானந்தாவின் ஆட்களை நிறுத்திவிட்டுச் சென்றார்.

இந்நிலையில் நேற்று மாலை 5 மணியளவில் நித்தியானந்தாவின் ஆட் கள் மற்றும் அவருடைய உதவியாளர்கள் உள்பட சிலர் தன்னை மடத்தை விட்டு வெளியேறச் சொல்லி அடித்துக் காயப் படுத்தி, தனி அறையில் பூட்டி விட்டனர் என்று மதுரை பொலிஸுக்கும்,ஆதின முன்னாள் உதவியாளர் ராமராஜிக்கும் இந்து மக்கள் கட்சி மாநில தலைவர் அர்ஜுன் சம்பத்துக்கும் தனது கைத் தொலைபேசி மூலம் கதறியபடி கூறியுள்ளார் வைஷ்ணவி.

இதையடுத்து ஆதினமடத்தின் இரண்டு பக்க கதவுகளை மூடிவிட்டு பொலிஸார் சோதனை நடத்தினர். மடத்துக்குள் இளம்பெண் தாக்கப்பட்ட சம்பவம் மதுரையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (எ-8)

# நடமாடும் சேவை

(பூநகரி)

இலங்கை ஆட்பதிவுத் திணைக்களத்தால் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் பலரது வேண்டுகோளிற்கு இணங்க நடமாடும் சேவையொன்று நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வு நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 9 மணிக்கு பூநகரி பிரதேச செயலர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக பூநகரி பிரதேச செயலக நிர்வாக அலுவலர் எஸ். சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

பௌரல் அமைப்பின் அனுசரணையோடு நடைபெறும் இந் நிகழ்வில் புகைப்படங்களும் இலவசமாக எடுப்பதுடன் முத்திரைகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (எ-9-84)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## அமைதியும் ஆண்மையும்



இறைவன் நமக்கு உதவி செய்யமுடியுமே தவிர இறைவனுக்கு நம்மால் உதவமுடியாது.எனவே இறைவனுக்கு உதவுகிறேன். (இறைப்பணி செய்கிறேன்) என்ற சொல்லை உள்ளத்திலிருந்து நீக்கிவிடுங்கள்.

நாய்க்குட்டிக்குச்சோறு வழங்கும்போது அந்த நாயையும் கடவுளாகப் பாவித்து வழிபடுங்கள். ஏனெனில் நாயினுள்ளும் கடவுள் இருக்கிறார்.

ஏழைகள், நோயாளிகள், பலவீனர்களிடம் இறைவனைக் காண்பவரே உண்மையில் அவரை வழிபடுகிறவர் ஆவார்.


கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண்டிருக்கிறார் என்பதால் மக்களுக்குச்சேவை செய்பவன் கடவுளுக்கே சேவை செய்பவன் ஆகிறான்.

அமைதியுடனும் ஆண்மையுடனும் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுங்கள்.

பெறத்தகுதியுடையவர் எந்தப்பொருளாக இருந்தாலும் அதைப்பெற்றே தீருவார். அதைத்தடுக்கும் சக்தி உலகில் எங்கும் இல்லை.

உலகில் ஒரே ஒருவனின் இதயத்திற்காவது சிறிதளவு இன்பமும் மகிழ்ச்சியும் அளிக்கமுடியுமானால்அது மட்டுமே நிஜமான சேவை.

# இந்தியாவுக்கு வந்துள்ள ஹிலாரி கிளின்டன் மம்தாவை சந்தித்து கலந்துரையாடினார்



(புதுடில்லி)

**இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் ஆப்கானிஸ்தான், ஈரான் மற்றும் தென்சீனக் கடல் விவகாரம் குறித்து விவாதிப்பார் எனத் தெரிகிறது.**



கொல்கத்தாவில் நேற்றைய தினம் ஹிலாரி அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜியை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது சில்லறை வர்த்தகத்தில் நேரடி அந்நிய முதலீடு, வங்கதேசத்துடனான உடன்படிக்கைகள் ஆகியவை குறித்து விவாதித்ததாகத் தெரிகிறது. அவர்களது சந்திப்பில் இந்த இர ண்டும் முக்கியமாக இடம்பெற்றுள்ளன.

சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டுக்கு எதிராக மம்தா பானர்ஜி குரல் கொடுத்து வருகிறார். மேலும் அண்மையில் பிரதமர் மன்மோகன் வங்கதேச பயணம் மேற்கொண்டபோது, தீஸ்தா நதிநீர் விவகாரத்தில் மம்தா பானர்ஜி இந்த பயணத்தைப் புறக்கணித்தார். இத்தகைய பின்னணியில் ஆசிய சுற்றுப் பயணத்தை மேற் கொண்டுள்ள ஹிலாரி தனது சீன, வங்கதேச சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு கொல்கத்தாவுக்கு வருகிறார்.

எனவே, மம்தாபானர்ஜியுடனான ஹிலாரியின் சந்திப்பு பெரும் எதிர்பார்ப்பையும் முக்கியத்துவத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இன்று டில்லியை வந்தடையும் ஹிலாரி நாளை செவ்வாய்க்கிழமை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுடன் ஆலோசனை நடத்துவார்.

பின்னர் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர மேனன் ஆகியோரையும் ஹிலாரி சந்திக்கக் கூடும் எனத் தெரிகிறது. இந்த பயணத்தின் போது ஆப்கானிஸ்தானில் இருந்து நேட்டோ படைகள் 2014 ஆம் ஆணடு வெளியேறுவது பற்றியும் அந்நாட்டில் வன்முறையற்ற சூழலை உருவாக்குவது தொடர்பாகவும் கிருஷ்ணாவுடன் ஹிலாரி விவாதிக்கக் கூடும். மேலும் ஈரானின் அணு ஆயுத விவகாரம் தொடர்பாகவும் ஈரானிடமிருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை முற்றிலுமாக நிறுத்துவது குறித்தும் ஹிலாரி வலியுறுத்தவும் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் சீன பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியாவுக்கு ஹலாரி வருவதால் நிச்சயம் தென்சீனக்கடல் விவகாரமும் இந்த ஆலோசனையில் இடம்பெறக் கூடும் எனத் தெரிகிறது. தென் சீனக் கடலில் சீனா ஒருபுறமும் இந்தியா, அமெரிக்கா ஒருபுறமும் நின்று கொண்டு பதற்றத்தை உருவாக்கி வரும் நிலையில் தென்சீனக் கடல் பற்றிய எதிர்கால நடவடிக்கைகளை ஹிலாரி கிருஷ்ணாவுடன் ஆலோசிப்பார் என தெரிகிறது. (அ-2)

# பனிப்பாறை உருகி ஏரி உடைப்பெடுப்பு; வெள்ளம் பெருக்கெடுத்து சொத்துக்கள் நாசம்

## 13 பேர் பலி;60 பேரைக் காணவில்லை



நேபாளத்தில் பனிப்பாறைகள் நிறைந்த ஏரி திடீரென உடைந்ததால் 13பேர் பலியாகினர். ரஷ்யாவைச் சேர்ந்த மூன்று மலையேற்ற வீரர்கள் உட்பட 60 பேரைக்காணவில்லை.

நேபாளத்தின் காஸ்கி மாவட்டத்தில் இமாலய மலைத் தொடரில் பனிப்பாறைகள் நிறைந்த ஏரி உள்ளது. இது நேற்று முன்தினம் திடீரென உடைந்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் அங்குள்ள சேதி நதியில் வெள்ளம் அதிகரித்து சார்டிகோலா கிராமம் வெள்ளத்தில் மூழ்கியது. வெள்ளத்தில் வீடுகள், பண்ணைகள், கால்நடைகள் அடித்துச் செல்லப்பட்டன. வெள்ளநீரில் மூழ்கி 13பேர் பலியாகினர். ரஷ்ய நாட்டைச்சேர்ந்த மலையேற்ற வீரர்கள் மூவர் உட்பட 60பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகத் தெரிகிறது.

இது குறித்து தகவல் கிடைத்ததும் இராணுவத்தினரும் பொலிஸ் அதிகாரிகளும் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். மீட்புப் பணியில் இராணுவ உலங்குவானூர்திகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. வெள்ளத்தில் லொறிகளும் பேருந்துகளும்கூட அடித்துச் செல்லப்பட்டுள்ளன. பருவநிலை மாற்றம் காரணமாக பனிப்பாறைகள் உருகி இதுபோன்ற வெள்ள அபாயம் ஏற்படும் என ஏற்கனவே வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர். (அ-2)

# ஆசிய வங்கியின் தலைவராக பிரணாப் முகர்ஜி தெரிவானார்

ஆசிய வங்கியின் தலைவராக மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஆசிய வங்கியின் 45ஆவது மாநாடு பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்று வருகிறது. இந்த மாநாட்டில் ஆசியப் பகுதி நாடுகளின் நிதியமைச்சர்களும் அந்த நாடுகளின் றிசர்வ் வங்கி ஆளுநர்களும் கலந்து கொள்கின்றனர். மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியும் இந்திய றிசர்வ் வங்கியின் ஆளுநர் டி சுப்பாராவும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ள அங்கு சென்றுள்ளனர்.

மாநாட்டின்போது ஆசிய வங்கியின் ஆளுநர்கள் குழுவின் புதிய தலைவராக பிரணாப் முகர்ஜியின் பெயர் அறிவிக்கப்பட்டது. அடுத்த ஆண்டின் மாநாடு புதுடில்லியில் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிய வங்கித் தலைவர் பதவி என்பது இந்தியாவுக்கு அளிக்கப்பட்ட கௌரவம் என்று பிரணாப்முகர்ஜி தெரிவித்தார்.

மணிலாவைத் தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் ஆசிய வங்கியில் 67 அங்கத்தினர்கள் உள்ளனர். அமெரிக்காவும் ஜப்பானும் இந்த வங்கியின் மிகப்பெரிய பங்குதாரர்கள். இந்தியா 5ஆவது பெரிய பங்குதாரர். (அ-2)

# பயங்கரவாதிகளை எதிர்கொள்ள ஆட்பலம் போதாது; தொழில் நுட்பம் ஒரு முக்கிய ஆயுதமாகும்- சிதம்பரம்


(புதுடில்லி)

பயங்கரவாதத்துக்கு எல்லைகள் கிடையாது என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

தேசிய பயங்கரவாதத் தடுப்பு மையம் குறித்து நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற முதல்வர்கள் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மாநாட்டில் அவர் உரையாற்றுகையில்,

தேசங்களுக்கிடையே உள்ள எல்லைக் கோடுகளோ ஒரு நாட்டின் மாநிலங்களுக்கிடையே இருக்கும் எல்லைகளோ பயங்கரவாதிகளுக்கு உரு பொருட்டல்ல. பயங்கரவாத குழுக்கள் பல நாடுகளிலும் தடம்



பதித்துள்ளன. எல்லை தாண்டி பயங்கரவாதச் செயல்களில் அவை ஈடுபடுகின்றன.

நிதி மோசடி, தகவல் திருட்டு, உளவு பார்த்தல் ஆகியவையும் பயங்கரவாதச் செயல்கள்தான். பயங்கரவாதிகளை எதிர்கொள்ள வெறும் ஆள் பலம் இருந்தால் மட்டும் போதாது. அவர்களுக்கு எதிரான போராட்டத்தில் தொழில்நுட்பம் ஒரு முக்கிய ஆயுதமாக இருக்கும்.

நமது நாட்டின் பாதுகாப்பு அமைப்புக்களில் தேசிய பயங்கரவாதத் தடுப்பு மையம் ஒரு முக்கிய தூணாக இருக்கும். நமது அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகளில் மத்திய மாநில அரசுகளுக்கு சம பங்கு இருக்கிறது.

மத்திய மாநில அரசுகள் இணைந்து செயற்பட்டு நம் நாட்டைப் பாதுகாக்க வேண்டும். ஆளும்கட்சி–எதிர்க்கட்சி, அரசு ஸ்தாபனங்கள்–பொதுநலஸ்தாபனங்கள் என அனைத்து தரப்பினரும் இணைந்து செயற்படுவதன் மூலம் நம் நாட்டை மிகவும் பாதுகாப்பான இடமாகத் திகழச் செய்ய முடியும் என்று நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

ஐ.நா. சபையின் பாதுகாப்புக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் கீழ் அனைத்து நாட்டு மக்களுக்கும் பயங்கரவாதத்திலிருந்து பாதுகாப்பு அளிக்க நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். இந்தியாவுக்கு 7,516 கிலோமீற்றர் அளவுக்கு நீண்ட கடல் எல்லை உள்ளது. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், நேபாளம், பூட்டான், சீனா, வங்கதேசம், மியன்மார் ஆகிய ஏழு நாடுகளுடன் 15,106 கிலோமீற்றர் நீளத்துக்கு சர்வதேச எல்லை இருக்கிறது. வெளிநாட்டுப் போக்குவரத்து முறையில் பல வழித்தடங்கள் இருக்கின்றன என்றார். (அ-2)



போப் பதினாறாம் பெனடிக்ட்டை அல்பேனியா ஜனாதிபதி பாமிர் டோபி வாடிகனில் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# தீவிரவாதிகளை ஒழிப்பது குறித்த மாநாட்டை நடத்த வேண்டும்

## ஐ.நா.பிரதிநிதி வலியுறுத்து


சர்வதேச தீவிரவாதிகளால் இந்தியா பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்ற நிலையில் இந்தியாவின் நீண்டகால கோரிக்கையான சர்வதேச தீவிரவாதிகளை ஒழிப்பது குறித்தான விரிவான மாநாட்டை நடத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்தியா வலியுறுத்தியுள்ளது.

தற்போது உலகம் சர்வதேச மயமாகி வரும் நிலையில் தீவிரவாதகளும் தங்கள் தொடர்புகளை உலக அளவில் ஏற்படுத்தியுள்ளனர். ஆயுதங்களை சர்வதேச சந்தையில் இருந்து பெற்று உலக நாடுகளுக்கு பெரும் சவாலாக இருக்கின்றனர் என்று இந்தியாவின் ஐ.நா.பிரதிநிதி ஹர்தீப் சிங் பூரி நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கூட்டத்தில் சுட்டிக்காட்டி பேசியுள்ளார்.

தீவிரவாதிகளால் இந்தியா உள்ளிட்ட பல உலகநாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு விரைவாக சர்வதேச அளவிலான தீவிரவாதிகளை ஒழிப்பது குறித்தான மாநாட்டை நடத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

மேலும் அல்கொய்தா, லஷ்கர் இ தொய்பா, ஜமாத் உத்தவா மற்றும் தலிபான்களால் இந்தியா கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், சர்வதேச கடத்தல் மற்றும் கொள்ளை குழுக்களுடன் சேர்ந்து தீவிரவாதிகள் செயற்படுவதாகவும் குற்றம் சாட்டினார். (அ-2)

# கடைசிப் பந்தில் சென்னையை வீழ்த்தி மும்பை திரில் வெற்றி




சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான நேற்றைய போட்டியில், மும்பை இந்தியன்ஸ் அணி 2 விக்கெட்டுக்களால் திரில் வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். போட்டியின் 49 ஆவது லீக் ஆட்டம் சென்னை சுப்பர் கிங்ஸ்–மும்பை இந்தியன்ஸ் அணிகளுக்கு இடையில் நேற்று மும்பையில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி களத்தடுப்பை தேர்வு முதலில் செய்தது.

இதனையடுத்து களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் ஆரம்ப வீரர்கள் டு பிளசிஸ், முரளி விஜய் ஆகியோர் ஓரளவு தாக்குப் பிடித்தனர்.

டு பிளசிஸ் 11 பந்துகளை எதிர்கொண்டு 9 ஓட்டங்களே எடுத்து ஆட்டம் இழந்தார். ஆனால் முரளி விஜய் அதிரடியாக விளை



யாடி, 29 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளுடன் 41 ஓட்டங்களை எடுத்தார்.

அவருக்கு இணையாக சுரேஸ் ரெய்னா 21 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகளுடன் 36 ஓட்டங்களை எடுத்தார்.

பிராவோ சற்று நிதானமாக ஆடி 33 பந்துகளில் 40 ஓட்டங்கள் எடுத்தார். இதில் ஒரு சிக்ஸர், 4 பவுண்டரிகள் அடங்கும்.

தோனி தன் பங்கிற்கு ஒரு சிக்ஸர், 2 பவுண்டரிகள் உட்பட 15 பந்துகளில் 25 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்தவர்கள் ஒற்றை இலக்கங்களில் ஆட்டமிழந்தனர். இதனால் 20 ஓவர்கள் முடிபில் 8 விக்கெட்டுக்களை இழந்து சென்னை அணி 173 ஓட்டங்களை எடுத்தது.

இதன்பின் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணியின் ஆரம்ப வீரர் பிராங்ளின் ஒரு ஓட்டம் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இதன் பின் சச்சின் டெண்டுல்கரும், ரோகித் சர்மாவும் இணைந்து ஓட்டங்களைக் குவிக்க தொடங்கினர்.

சச்சின் 44 பந்துகளில் ஒரு சிக்ஸர், 11 பவுண்டரிகளுடன் 74 ஓட்டங்களைக் குவித்தார். ரோகித் சர்மா 46 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகளுடன் 60 ஓட்டங்கள் எடுத்தார்.

அதன் பின் வந்தவர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும், கடைசிக் கட்டத்தில் 9 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் அடித்து டெவோன் ஸ்மித் ஓட்டங்கள் சேர்க்க மும்பை இந்தியன்ஸ் அணி 174 ஓட்டங்கள் எடுத்து 2 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இப் போட்டியின் சிறப்பாட்டக்காராக மும்பை இந்தியன்ஸின் வெற்றிக்கு வழி வகுத்த டெவோன் ஸ்மித் தேர்வானார்.

**இன்றைய ஐ.பி.எல். போட்டி:**
இரவு 8 மணிக்கு டில்லியில் நடைபெறும் போட்டியில் டில்லி டேர்டேவில்ஸ் எதிர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி மோதுகின்றது.

# கங்குலிக்கு மீண்டும் அபராதம்

கொல்கத்தா நைட் ரைடர்ஸ்–புனே வாரியர்ஸ் அணிகள் மோதிய ஆட்டம் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்தது.

இந்த போட்டியின்போது புனே வாரியர்ஸ் அணி மெதுவாகப் பந்துவீசியது தெரிய வந்தது. குறிப்பிட்ட நேரத்தில் ஒரு ஓவர் குறைவாகப் பந்துவீசியது கண்டுபிடிக்கப்பட்டது.

இதற்காக புனே வாரியர்ஸ் அணித் தலைவர் கங்குலிக்கு ரூ.50 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே ஒருமுறை அவர் மீது இதே மாதிரி மெதுவாக பந்து வீசியதற்காக ரூ. 25 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டிருந்தது.

புனே வாரியர்ஸ் அணி மீண்டும் மெதுவாக பந்து வீசியதால் அந்த அணியின் மற்ற 10 வீரர்களுக்கும் போட்டியில் இருந்து பெறும் பணத்தில் 25 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது.



நேற்று முன்தின ஆட்டத்தில் புனே வாரியர்ஸ் வீரர் ஸ்டீவ் ஸ்மித், நடுவரின் முடிபுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நடந்து கொண்டார். இதைத் தொடர்ந்து வீரர்களின் நடத்தை விதிமுறையை மீறியதாக அவருக்கு அதிகாரபூர்வ எச்சரிக்கை விடுக்கப்பட்டது.


# பெங்களூர் 5 விக்கெட்டுகளால் டெக்கான் அணியை வீழ்த்தியது

ஐ.பி.எல். போட்டியின் 50 ஆவது லீக் ஆட்டம் பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்றது.

இதில் சங்கக்கார தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் டானியல் விக்டோரி தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் அணித் தலைவர் டானியல் விக்டோரி ;டெக்கான் அணியை துடுப்பாட்டம் செய்ய அழைத்தார்.

அதன்படி டெக்கான் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக ஹரிஸ்,தவான் ஆகியோர் களமிறங்கினர்.



இருவரும் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 86 ஓட்டங்களை எடுத்திருந்தபோது 47 ஓட்டங்களை எடுத்திருந்த ஹரிஸ் ஆட்டம் இழந்தார்.

அடுத்து வந்த வைட், தவானுடன் இணைந்து அதிரடியில் அசத்தினார்.

24 பந்துகளில் 3 சிக்ஸருடன் 45 ஓட்டங்களை எடுத்த வைட் கடைசி ஓவரில் ஆட்டம் இழந்தார்.

இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிபில் டெக்கான்அணி 2 விக்கெட் இழப்பிற்கு 181 ஓட்டங்களைக் குவித்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரரான தவான் 52 பந்துகளில் 73 ஓட்டங்களை எடுத்து இறுதி வரை களத்தில் இருந்தார்.

கடைசி ஓவரில் களம் புகுந்த சங்கக்கார தன் பங்கிற்கு ஒரு பவுண்டரி,ஒரு சிக்ஸருடன் 3 பந்துகளில் 10 ஓட்டங்களை எடுத்தார்.

இதனையடுத்து 182 ஓட்டங்கள் வெற்றி இலக்குடன் பெங்களூர் அணி பதிலெடுத்தாடக் களமிறங்கியது.

ஹெயில் – டில்சான் ஜோடி அதிரடி காட்டியது.

ஆனால் ஹெயில் 26 ஓட்டங்களில் ஆட்மிழந்தார்.அடுத்து வந்த விராட் ஹோலியும் 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

நிலைத்து நின்று ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கைய தூக்கி நிறுத்திய டில்சான் 71 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இவ்வேளையில் பெங்களூர் அணியின் ஓட்ட எண்ணிக்கையை டெக்கான் கட்டுப்படுத்திய போதும், டி வில்லியர்ஸ் அதிரடி காட்டி பெங்களூரை வெற்றி பெற வைத்தார்.

இதனால் பெங்களூர் 5 விக்கெட்டுகளால் டெக்கானை வெற்றி கொண்டது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக 17 பந்துகளினை எதிர்கொண்டு 47 ஓட்டங்களை பெற்ற டி வில்லியர்ஸ் தேர்வானார்.

# முரளியே உண்மையான 'மிஸ்டர் கிரிக்கெட்'

## - மைக்கல் ஹசி



இலங்கை அணியின் ஓய்வுபெற்ற சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனே உண்மையான மிஸ்டர் கிரிக்கெட் என அவுஸ்ரேலிய அணியின் துடுப்பாட்ட வீரரும் மிஸ்டர் கிரிக்கெட் என உலகக் கிரிக்கெட் ரசிகர்களினால் அன்பாக அழைக்கப்படுபவருமான மைக்கல் ஹசி தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட்டிற்காக தன்னை அர்ப்பணித்து விளையாடும் தன்மைக்காக இங்கிலாந்து பிராந்தியப் போட்டிகளில் விளையாடும் போது முதன் முறையாக வழங்கப்பட்ட மிஸ்டர் கிரிக்கெட் என்ற பட்டப் பெயர், தற்போது மைக்கல் ஹசிக்கு பொதுவாக உலகிலுள்ள அனைத்து கிரிக்கெட் ரசிகர்கள் மற்றும் நேர்முக வர்ணனையாளர்களால் அன்பாக வழங்கப்படுகிறது.

எனினும் மிஸ்டர் கிரிக்கெட் என்ற பெயரை தான் விரும்புவதில்லை எனத் தெரிவித்த மைக்கல் ஹசி, தன்னை விட கிரிக்கெட்டை மிகச் சிறப்பாக விளையாடிய கிரிக்கெட் வீரர்கள் உள்ளார்கள் எனவும் தெரிவித்தார்.

தன்னைப் பொறுத்தவரை முத்தையா முரளிதரனே மிஸ்டர் கிரிக்கெட் எனத் தெரிவித்த மைக்கல் ஹசி கிரிக்கெட்டை அவர் எதிர்கொண்ட விதத்தின் காரணமாக அவருக்கு இப்பெயர் பொருத்தமானது எனக் கருதுவதாகவும் தெரிவித்தார்.

தற்போது 40 வயதான முத்தையா முரளிதரன் 133 டெஸ்ட் போட்டிகளில் 800 டெஸ்ட் விக்கெட்டுக்களையும் 350 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 534 விக்கெட்டுக்களையும் 12 இருபது -20 சர்வதேச போட்டிகளில் 13 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளதோடு டெஸ்ட் போட்டிகள் மற்றும் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் அதிகூடிய விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய சாதனை உட்பட ஏராளமான சாதனைகளைத் தன் வசம் கொண்டுள்ளார்.

முத்தையா முரளிதரனும் மைக்கல் ஹசியும் முதல் 3 ஐ.பி.எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக பங்குபற்றியுள்ளதோடு தற்போது முத்தையா முரளிதரன் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி சார்பாக ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றி வருகிறார்.

# ஆணைக்குழுவின்...

சிங்களம் மாத்திரம் என்ற நிலைப்பாட்டில் இருந்து மாறி, மொழி விவகாரங்களை மிகவும் முக்கியமாகக் கருதி அரசாங்கம் கையாள வேண்டும்.

சட்டவிரோத ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்படுவதுடன் மிகவும் வேதனையான காணாமல்போனவர்களின் விவகாரத்தை அரசாங்கம் கையாளவேண்டும்.

இன்னமும் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் விபரங்களை முழுமையாக வெளியிடுவதன் மூலம், மக்கள் தமது உறவுகள் உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா? இல்லாவிட்டால் அவர்கள் எப்போது உயிரிழந்தார்கள் என்பதையாவது அறிந்து கொள்ள முடியும்.

அத்துடன் தடுத்து வைக்கப்படாமல் காணாமல் போயிருப்பவர்கள் விடயத்தில், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதிலும், அரசாங்கத்தக்கு பொறுப்பு இருக்கிறது. அரசு மக்களின் சட்டரீதியிலான தகவல்களை அறிந்துகொள்ளும் உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படவேண்டும்.

உறவினர்களை இழந்தவர்களின் துயரங்கள் ஒவ்வொருவருக்கும் உரித்தானவை, ஆழமாகப் பதிந்திருக்கக் கூடியவை என்பதையும் நாம் அங்கீகரிக்க வேண்டும். நடைமுறைப்படுத்தக்கூடிய பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்கு ஒரு பொறுப்பான குழுவை அரசாங்கம் நியமிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர். (எ-8)

# டிப்பருடன் மோதிய பொலிஸ் ஜீப் பொலிஸ் பொறுப்பதிகாரி காயம்

## தச்சன்தோப்பில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரியுடன் சென்ற ஜீப் நிறுத்திவைக்கப்பட்டிருந்த டிப்பர்வாகனத்துடன்மோதியதில்பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிஉட்பட மூவர்படுகாய மடைந்தனர்.

இச் சம்பவம் சாவகச்சேரி தச்சன்தோப்பு பகுதியில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. காயமடைந்த மூவர் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒட்டிசுட்டானிலிருந்து கல் ஏற்றிக் கொண்டு வந்த டிப்பர் வாகனம் தச்சன் தோப்பு பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தச்சன்தோப்பு பகுதி நோக்கி சென்று கொண்டிருந்த பொலிஸ் ஜீப் டிப்பர் வாகனத்தின் பின்புறத்தே மோதி விபத்துக்குள்ளானது. இதில் சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரி சந்திரசேகர மற்றும் இரு கான்ஸ்டபிள்கள் என மூவர் படுகாய மடைந்தனர். (எ-8)

# தமிழ் அர...

வேண்டும் என ஐரோப்பிய பாராளுமன்றின் தெற்கு ஆசிய தொடர்புகளுக்கான தலைவர் ஜீன் லம்பேர்ட் நேற்று தெரிவித்துள்ளார்.

நூற்றுக்கு மேற்பட்ட புலிச் சந்தேகநபர்கள் மற்றும் அரசியல் கைதிகள் இலங்கை சிறையில் உள்ளனர். அவர்களில் சிலர் பல மாதங்களாக பல வருடங்களாக விசாரணைகளை சந்திக்கவில்லை. அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படவில்லை. இவ்வாறு இலங்கை சிறுபான்மை தமிழ்க் கட்சிகள் தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது பிணை கோரியுள்ள சரத் பொன்சேகா தொடர்பிலும் நியாயமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். யுத்தத்தில் இடம்பெயர்ந்த மக்கள் சிலர் இன்னும் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளமை கவலையளிக்கிறது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐரோப்பிய பாராளுமன்ற குழுவினர் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கில் அரசியல் தலைவர்களை சந்தித்து இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததாக ஜீன் லம்பேர்ட் குறிப்பிட்டுள்ளார். (எ-8)

# சிங்கக்கொடி விவகாரத்தால்...

தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, பிரிபடாத ஒரே நாட்டுக்குள் வாழ்வதற்கு தமிழர்கள் தயார் என்பதை இலங்கை அரசுக்கும் சிங்கள மக்களுக்கும் உலகத்திற்கும் வெளிக் காட்டும் ஓர் அடையாளமாக சம்பந்தன் இலங்கை தேசியக்கொடியை தூக்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இன்று நடைமுறையில் நாட்டுக் குள்ளே இலங்கைத்தமிழர்கள் எதிர் நோக்கும் சவால்களையும் எமக்கு இருக்கின்ற பலத்தையும் சாதக, பாதகங்களையும் சீர்தூக்கிப் பார்த்து இந்த நடவடிக்கையை சம்பந்தன் சுய விருப்புடன் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவருடன் இணைந்து செய்துள்ளார் எனத் தெரிகிறது.

மறுபுறத்தில் இந்தச் சிங்கக்கொடி தேசியக் கொடியாகக் கருதப்பட்டாலும் அது சிங்கள பௌத்த இனவாதத்தை அடையாளப்படுத்துகிறது என தமிழ்த் தேசியவாதிகளும் இலங்கையின் சிங்கள முற்போக்காளர்களும் முழுமையாக நம்புகிறார்கள். அது முற்றிலும் உண்மையானதும் துரதிர்ஷ்டவசமானதுமான நம்பிக்கை ஆகும்.

யாழ்ப்பாணத்தில் நடந்த இந்தத் தேசியச் சிங்கக்கொடி தூக்கல் தொடர்பிலான நிகழ்ச்சி நிரல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களுக்குத் தெரிந்து இருக்கவில்லை என்பது இன்று பகிரங்கமாகியுள்ளது.

அதேபோல்எதிர்க்கட்சித்கூட்டமைப்பில்உள்ள எமது ஜனநாயக மக்கள் முன்னணி நவசமசமாஜக் கட்சி, ஐக்கிய சமவுடைமைக்கட்சி ஆகிய கட்சி களுக்கும் இதுபற்றி எதுவும் தெரியாது. இவை நிகழ்ச்சி நிரலில் ஏற்பட்ட திடீர்மாற்றங்கள்.

ஒரு கட்சித்தலைவர் என்ற முறையில் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனுக்கு இத்தகைய முடிபுகளை எடுப்பதற்கு முழுமையானஉரிமை இருக்கின்றது. அதை நாம் அங்கீகரிக்கவேண்டும்.

சம்பந்தன் ஒரு அக்னிப் பரீட்சையை தமது நல்லெண்ண அடையாளத்தை அறிவித்துள்ளார். இதை இலங்கை அரசாங்கம் ஒரு நல்ல அடையாளமாகப் பார்த்துப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

தமிழருக்கு எதுவும் தந்து விடக்கூடாது என்று கூக்குரல் இடும் சிங்கள இனவாத சக்திகளைப் புறந்தள்ளி தேசிய இனப்பிரச்சினைக்கு தமிழர் அபிலாசைகளுக்கு ஏற்புடைய நியாயமான தீர்வைப் ஏற்படுத்த வேண்டும். தேசியப் இனப்பிரச்சினைக்குத் தரப்படும் தீர்வுதான் தேசியக்கொடியைத் தூக்கிய கூட்டமைப்புத்தலைவருக்குச் செய்யும் உபகாரமாகும்.

கூட்டமைப்புத் தலைவரை தேசிய சிங்கக் கொடியைத்தூக்கவைத்த பெருமை கொண்ட ஐ.தே.க. தலைவருக்கும் அதில் சமபொறுப்பு இருக்கிறது. சம்பந்தன் தேசியக்கொடி தூக்கியதை வரவேற்று இது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவை பாராட்டுகின்ற அரசாங்கம் பேச்சு வார்த்தை தொடர்பில் தொடர்ந்தும் கடும் போக்கிலேயே இருக்கிறது.

தேவையற்ற நிபந்தனைகளைக் கைவிட்டு உடனடியாக பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலை அறிவிக்கும்படி அரசாங்கத்தை எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்த வேண்டும் என்றார். (அ-2)

# 6 இலங்கை...

அதன் பின்னர் படகுடன் அவர்களை கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களை 500 கிலோகிராம் மீனுடன் காக்கிநாடா கூடற்பரப்பு பொலிஸாரிடம் நேற்றுமுன்தினம் 5ஆம் திகதி மாலை ஒப்படைத்தனர். (எ-8)

# மீண்டும் அரசாங்கத்...

வார்த்தையை மீண்டும் தொடங்க விரும்புவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக் குழு பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்னர் அரசு–கூட்டமைப்பு பேச்சுவார்த்தை தொடங்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

பன்முகப் பேச்சுவார்த்தை என்பது பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு வழிசெய்வதற்கான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நுட்பம் என சுரேஸ் எம்.பி.குறிப்பிட்டுள்ளார்.

கூட்டமைப்பை பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம்பெறச் செய்வது அரசாங்கத்தின் மற்றுமொரு தந்திரோபாயம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அரசியல் தீர்வொன்றைக்காண பாராளுமன்ற தெரிவுக் குழுவில் இடம்பெறுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கடந்த வாரம் அழைப்பு விடுத்ததோடு அதற்கு மத்தியஸ்தம் வகிக்கத் தான் தயார் எனவும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை இலங்கை வந்து சென்ற இந்திய எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ்சுவட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்குமாறு கோரியிருந்தார்.

எனினும்கூட்டமைப்பு அவை அனைத்தையும் நிராகரித்து விட்டு தமது நிலைப் பாட்டில் உறுதியாக உள்ளது. (எ-8)

பாரம்பரிய பட்டுக்களின் பரந்த சோலை
காவேரி சில்க்ஸ்
இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாரம்பரிய பட்டுக்கள், புத்தம் புதிய நவீனரக சல்வார்கள், பஞ்சாபிகள் மற்றும் அனைத்து தரப்பினருக்குமான ஆடை வகைகளும் நியாயமான விலைகளில் கிடைக்கும் ஒரே இடம்.
48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
திருமணப்பட்டுப் புடைவைகளுக்கு
கைராசியான ஸ்தாபனம்
தொ.பே:-021 222 2333


# மரண அறிவித்தல்

## அருளப்பு பினியன் அரியநாயகம்



கொழும்பு ஜா எலவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பாண்டியந்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட அருளப்பு பினியன் அரியநாயகம் நேற்று (06.05.2012) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசப் அருளப்பு மேரி மாகிறற் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மேஜர் இமானுவேல் சில்வியா தம்பதியரின் அன்பு மருமகனும் ராணி அரியநாயகத்தின் (Regional Consultant Sri Lankan Insurance) அன்புக் கணவரும் அன்ரனற் சுரேஷினியின் (லண்டன்) பாசமிகு தந்தையும் அன்ரன் சதீஸ் டொமினிக்கின் (லண்டன்) அன்பு மாமனாரும் அமரர் அருட்பணி பற்றிக் இம்மானுவேல் அவர்களின் அன்பு மைத்துனரும் செல்வின் ஞானராசா (கொழும்பு), எட்வின் துரைநாயகம் (கனடா), பெனடிற் இராசநாயகம் (நீர் கொழும்பு), யேன் அன்ரனற் (கனடா), மடோனா தேவராணி, டக்கிளஸ் அருள் நாயகம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்தனம் பிலோமினாவின் உடன் பிறவாச் சகோதரனும், பபி, தறுமி, மஞ்சு, சிறில், சந்திரிக்கா ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிறேயா கிறிஸ்ரீன், ஈர்த்தன், அன்றூ ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 08.05.2012 நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பாண்டிந்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

54/3, புனித அன்னாள் ஆலய முன் ஒழுங்கை,
பாண்டியந்தாழ்வு.
தொ.பே.: 021 222 3591

தகவல்: குடும்பத்தினர்

(C-6557)

உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களிலும் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்.
விசேட சலுகைகள்!
மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல்உணவுகள், மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.
DHL WORLDWIDE EXPRESS கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள்,CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட
DHL WORLDWIDE EXPRESS

திருமுருகன் கொம் நெற்
இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, பிரதான வீதி, கிளிநொச்சி.
T.P : 021 222 7835

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.